ஸம்புடம் 2] வருஷச்சந்தா ரூ. 1 8 0. [ஸஞ்சிகை 4

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: ॥

# ‘ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷிணீ’

(மாதப் பத்திரிகை.)



பத்திரிகாதிபர்:— A. V. கோபாலாசாரியர், M.A.,B.L.,

(ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபை அக்ராஸநாதிபதி)

ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷணஸபையாரால்

பிரசுரம் செய்யப்படுவது

1936-ளு ஏப்ரல்-மீ [சித்திரை-மீ

3L
O2 ˣ211, N35SS
1N36·2·4.
157893

## விஷயம்.


| | | | |
|---|---|---|---|
| 1. | தயாசதகம் | [தொடர்ச்சி] | 41—56 |
| 2. | பாதுகாஸஹஸ்ராவதார தத்வ விமர்சம் | [தொடர்ச்சி] | 129—136 |
| 3. | வாத்ஸல்யார்த்த விவரண விமர்சம் | [தொடர்ச்சி] | 163—170 |
| 4. | பதிலுரைகள் | | 9—16 |



## புஸ்தக விளம்பரம்.

| புஸ்தகத்தின்பெயர். | விலை |
|---|---|
| 1. வித்வந்மநோரஞ்சநம் | ... ... ரூ. 0 2 0 |
| 2. படியடக்கம் | ... ... ரூ. 0 4 0 |
| 3. விஜயவித்வம்ஸந மஹா நாராயணஸ்த்ரம். | ... ... ரூ. 0 4 0 |
| 4. மஹாநாராயணஸ்த்ர விஜயப்ரகாசம். | ... ... ரூ. 0 2 0 |

மேலேகண்ட புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—

பரவஸ்து, ஸ்ரீநிவாஸாசாரியர்,
29, "கிருஷ்ணபவனம்"
வெப்பேரி போஸ்டு,
சென்னை.




(தா-ம்) அவரவர்களுக்கு வேண்டிய சாக்குகளெல்லாம் வேதங்களென்னும் கடைத்தெருவில் அகப்படும். அங்கே வேண்டியவர்கள் தங்களுக்கு இஷ்டமான ப்ரயோஜனங்களைக் கொள்ளலாம். சில்லரைப் பிரயோஜனங்களில் ஆசைப்படும் அல்ப ஜனங்களும் தங்களுக்கு வேண்டிய ப்ரயோஜனங்களைக்கொள்ள அந்தக் கடைத்தெருவில் புகுகிறார்கள். வேதமென்னும் கடைத்தெருவுக்கு வந்தும் அங்கே உள்ள ஸர்வோத்தமமானமோக்ஷமென்னும் பகவத் பிராப்திப் பிரயோஜனத்தை இவர்கள் விரும்பிக்கொள்ளாமலே இருக்கிறார்களேயென்று தயா தேவியானவள் இவர்களிடத்தில் இறங்கி இவர்கள் மனதை உயர்ந்த மோக்ஷ மார்க்கத்தில் திருப்புவதற்காக வியாபாரிகள் முத்துக்களோடு கலந்து கோர்த்த உயர்ந்த கல்லுகளைக் காட்டுவது போல முக்தர்களோடு கலந்த நீலமணியான பெருமாளைக் காட்டி அவர்கள் மனஸை அவரிடம் ஈடுபடும்படி செய்கிறாள். (39)

த்வயி பஹுமதிஹீந: ஶ்ரீநிவாஸாநுகம்பே
ஜகதி கதிமிஹாந்யாம் தேவி ஸம்மந்யதே ய: ।
ஸ கலு விபுதஸிந்தௌ ஸந்நிகர்ஷே வஹந்த்யாம்
ஶமயதி ம்ருகத்ருஷ்ணாவீசிகாபி: பிபாஸாம் ॥ ௪௦ ॥

த்வயி பஹுமதிஹீந: ஸ்ரீநிவாஸாநுகம்பே
ஜகதி கதிமிஹாந்யாம் தேவி ஸம்மந்யதே ய: ।
ஸ கலு விபுதஸிந்தௌ ஸந்நிகர்ஷே வஹந்த்யாம்
சமயதி ம்ருகத்ருஷ்ணா வீசிகாபி: பிபாஸாம். ॥ (40)

(ப-ரை) தேவி ஶ்ரீநிவாஸாநுகம்பே - ஸ்ரீநிவாஸனுடைய தயையாகிய தேவியே! ய: - எவன், த்வயி - உன்னிடம், பஹுமதிஹீந:-கௌரவபுத்தியில்லாமல், இஹ ஜகதி- இந்த பூமண்டலத்தில், அந்யாம் கதிம் - வேறு உபாயத்தை, ஸம்மந்யதே - நல்லதென்று கைப்பற்றுகிறானோ, ஸ: - அவன், ஸந்நிகர்ஷே- ஸமீபத்தில், விபுதஸிந்தௌ- தேவநதியான கங்கை, வஹந்த்யாம் - ஓடிக்கொண்டிருக்கையில், ம்ருகத்ருஷ்ணாவீசிகாபி: - கானலின் அலைகளால், பிபாஸாம் - தாஹத்தை, ஶமயதி கலு - தீர்த்துக்கொள்ளுபவனல்லவா!

"ஸ்ரீநிவாஸனுடைய தயையாகிய தேவியே! இவ்வுலகில் எவன் உன்னிடம் வெகுமானமில்லாமல் வேறுகதியைத் தேடுகிறு



189893

ளே அவன் தேவ நதியாகிய கங்காநதி, அருகில் ப்ரவஹித்துக் கொண்டிருக்கையில் கானலில் தோன்றும் ஜலத்தினால் தாஹத்தைத் தீர்க்க விரும்புகிறவனைப்போலாவான்".

(தா-ம்) கோடைகாலத்தில் மத்யானவேளையில் தாஹத்தால் பீடிக்கப்படும் மான்கள் மணலில் வெயிலில் தூரத்தில் இருந்து பார்க்கையில் ஜலம் ஓடுவதுபோல் இருப்பதைக் கண்டு ப்ரமித்து, அந்த ஜலத்தைக் குடிக்கலாமென்று அதனருகே ஓடும். வெயிலில் ஓடுவதினால் தாஹம் அதிகப்படுமேயொழிய அங்கே ஜலமில்லாததினால், தாஹம் தீராது. ஸ்ரீநிவாஸனுடைய தயை நம்முடைய பாபங்களை எல்லாம் போக்கவல்ல குளிர்ந்த ப்ரவாஹம். அந்த தயாப்ரவாஹம் நம் அருகாமையில் ஜில்லென்று ஓடிக்கொண்டே இருக்கிறது. நாம் நினைத்தமாத்திரத்தாலேயே நாம் அதில் அவகாஹித்து நம்முடைய அநாதிதாபத்ரயங்களைச் சமநம் செய்து கொள்ளலாம். நாம் அபேக்ஷித்தவளவிலே தயாதேவி நம்மைக் காக்க ஸஜ்ஜமாயிருக்கிறாள். அவளை விட்டுவிட்டு வேறு கதியைத் தேடுவது அருகிலுள்ள கங்காப்ரவாஹத்தை விட்டுவிட்டுக் கானல் நீரைத் தேடி ஓடுவதுபோலாகும். சாகுந்தளநாடகத்தில் ஆறுவது அங்கத்தில் சகுந்தளையின் விரஹகாலத்தில் பொழுதுபோக்குக்காகவும், விரஹவ்யஸனத்தின் ஆறுதலுக்காகவும் அவளைப்போல ஒரு சித்திரமெழுதி அந்தப் படத்தைப் பார்த்துத்தான் அதைப் புகழ்வதைப் பற்றி ராஜா தன்னையே நகைத்துப் பரிஹாஸத்துடன் ஒரு ச்லோகம் சொல்லுகிறார். "என்னுடைய ப்ரியையாகிய சகுந்தலை நேரில் ஸாக்ஷாத்தாக என்னிடம் வந்தபொழுது அவளை வேண்டாமென்று முன்பு திரஸ்கரித்துவிட்டுச் சித்திரத்தில் எழுதப்பட்டிருக்கும் இவளை நான் பஹுமதிசெய்வது என் போலாகுமென்றால், செல்லும் மார்க்கத்தில் யதேஷ்டமான குளிர்ந்த ஜலமோடும் நதியில் தாஹத்தைத் தீர்த்துக்கொள்ளாமல், அதைத் தாண்டிய பிறகு ம்ருகத்ருஷ்ணிகை என்னும் கானலில் நீரோடுவதாக ப்ரமித்து அதை ஆசையுடன் தேடுபவன்போலாகிறேன்" என்பது அவர் வார்த்தை. அந்த ச்லோகத்திலுள்ள பதங்களையும் பாவங்களையும் வைத்து இந்த ச்லோகம் அமைக்கப்பட்டிருக்கிறது. (40)

𑌆𑌜𑍍𑌞𑌾𑌂 𑌖𑍍𑌯𑌾𑌤𑌿𑌂 𑌧𑌨𑌮𑌨𑍁𑌚𑌰𑌾𑌨𑌾𑌧𑌿𑌰𑌾𑌜𑍍𑌯𑌾𑌦𑌿𑌕𑌂 𑌵𑌾
𑌕𑌾𑌲𑍇 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌕𑌮𑌲𑌵𑌸𑌤𑍇𑌰𑌪𑍍𑌯𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍𑌕𑌰𑌾𑌣𑌿 ।



𑌪𑌦𑍍𑌮𑌾𑌕𑌾𑌨𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌣𑌿𑌹𑌿𑌤𑌵𑌤𑍀𑌂 𑌪𑌾𑌲𑌨𑍇𑌽𑌨𑌨𑍍𑌯𑌸𑌾𑌧𑍍𑌯𑍇
𑌸𑌾𑌰𑌾𑌭𑌿𑌜𑍍𑌞𑌾 𑌜𑌗𑌤𑌿 𑌕𑍃𑌤𑌿𑌨𑌃 𑌸𑌂𑌶𑍍𑌰𑌯𑌨𑍍𑌤𑍇 𑌦𑌯𑍇 𑌤𑍍𑌵𑌾𑌂 ॥

ஆஜ்ஞாம் க்யாதிம் தநமநுசராநாதிராஜ்யாதிகம் வா
காலே த்ருஷ்ட்வா கமலவஸதேரப்யகிஞ்சித் கராணி |
பத்மாகாந்தம் ப்ரணிஹிதவதீம் பாலநேZநந்யஸாத்யே
ஸாராபிஜ்ஞா ஜகதி க்ருதிந: ஸம்ச்ரயந்தே தயே த்வாம் ||

(பதவுரை) 𑌹𑍇 𑌦𑌯𑍇 - ஓ தயையே! 𑌜𑌗𑌤𑌿 - உலகத்தில், 𑌸𑌾𑌰𑌾𑌭𑌿𑌜𑍍𑌞𑌾𑌃 𑌕𑍃𑌤𑌿𑌨𑌃 - ஸாராம்சத்தை அறிந்த பாக்யவான்கள், 𑌕𑌮𑌲𑌵𑌸𑌤𑍇𑌰𑌪𑌿 - ப்ரஹ்மதேவனுக்கும், 𑌆𑌜𑍍𑌞𑌾𑌂 - ஆஜ்ஞை என்ன, 𑌖𑍍𑌯𑌾𑌤𑌿𑌂 - யசஸ்ஸென்ன, 𑌧𑌨𑌂 - பணமென்ன, 𑌅𑌨𑍁𑌚𑌰𑌾𑌨𑍍 - ஏவியத்தொழில் செய்யுமவர்கள் என்ன, 𑌆𑌧𑌿𑌰𑌾𑌜𑍍𑌯𑌾𑌦𑌿𑌕𑌂 𑌵𑌾 - ஸார்வபௌமத்வம் முதலியவை என்ன இவைகளை, 𑌕𑌾𑌲𑍇 - ஒரு காலவிசேஷத்தில், 𑌅𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍𑌕𑌰𑌾𑌣𑌿 - கார்யகரங்களாகாதவைகளாக, 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 - கண்டு, 𑌅𑌨𑌨𑍍𑌯𑌸𑌾𑌧𑍍𑌯𑍇 - மற்றொருவராலும் ஸாத்யமல்லாத, 𑌪𑌾𑌲𑌨𑍇 - ரக்ஷணத்தில், 𑌪𑌦𑍍𑌮𑌾𑌕𑌾𑌨𑍍𑌤𑌂 - ச்ரிய: பதியை, 𑌪𑍍𑌰𑌣𑌿𑌹𑌿𑌤𑌵𑌤𑍀𑌂 - நியமிக்கின்றவளான, 𑌤𑍍𑌵𑌾𑌂 - உன்னையே, 𑌸𑌂𑌶𑍍𑌰𑌯𑌨𑍍𑌤𑍇 - ஆச்ரயிக்கிறார்கள்.

"தயையே! உலகத்தில் ஸாரமறிந்த பாக்யசாலிகள் பகவானுடைய நாபீகமலத்தில் உதித்த ப்ரஹ்மாவினுடைய ஆஜ்ஞையும், பெருமையும், செல்வமும், பரிவாரங்களும், ஆளுகை முதலியவைகளும் ஒரு காலவிசேஷத்தில் பயன்படாமற்போகின்றன என்பதைத் தெரிந்துகொண்டு, வேறொருவருக்கு ஸாத்யமல்லாத ரக்ஷணவ்யாபாரத்தில் ஸ்ரீநிவாஸனை அமைத்து வைத்திருக்கும் உன்னையே ஆச்ரயிக்கிறார்கள்."

(தா-ம்) குலசேகராழ்வாருடைய முகுந்தமாலா ஸ்தோத்ரத்தில் உள்ள சில ச்லோகங்களை நினைத்துத் தயையை ஸம்ஸார ஸமுத்ரத்தைத் தாண்டுவிக்கும் ஓடம் என்று வர்ணித்தார். குலசேகராழ்வாருடைய முகுந்தமாலையையும், திருமலையைப் பற்றி அவருடைய பாசுரங்களையும், அநுஸரித்து இந்த தசகத்தில் அநுபவம். மலைமேல் ஸஞ்சரிப்பவர்கள் மேடு பள்ளமான இடங்களில் ஏறுவதும் இறங்குவதுமாய் ஸஞ்சரித்து

மூச்சு வாங்கிக்கொண்டு மந்தாக்ராந்தை என்னும் சந்தத்தில் பாடுவார்கள். ராமகிரிமலைமேல் ஸஞ்சரித்த யக்ஷன் மந்தாக்ராந்தா வ்ருத்தத்தில் மேகஸந்தேசத்தைப் பாடினான். இந்த தசகம் திருமலைமேல் மந்தாக்ராந்தாவ்ருத்தத்தில் பாடப்படுகிறது. ப்ரஜைகளுக்கெல்லாம் பதியான ப்ராஜாபதியின் ஐச்வர்யத்தையும், பசுபதியின் ஐச்வர்யத்தையும் நான் விரும்பேன். யமுனைக்கரையில் கதம்பவ்ருக்ஷமாயாவது, குந்தவ்ருக்ஷமாயாவது பிறக்க ஆசைப்படுகிறேன் என்கிற பக்தர் மனோரதத்தை அநுஸரித்து, இந்த சுலோகத்திலும், அடுத்த ச்லோகத்திலும்ப்ரஜாபதியின்ஐச்வர்யத்தில் வைராக்யத்தைக் காட்டி, திருமலையில் ஜங்கமஸ்தாவரங்களில் ஏதேனுமொன்றாய்ப் பிறக்கவேண்டுமென்று ஆசையைக் காட்டுகிறார். ஸ்ரீநிவாஸனுடையை உந்திக்கமலத்தில் அவதரித்த ப்ரஹ்மாவின் ஐச்வர்யமே நிலையற்றது. ஒருகாலத்தில் அது இருந்த இடம் தெரியாமல் போய்விடுகிறது. ஆகையால் அதையும் அஸாரமென்று தள்ளி அழியாத பதத்தைப் பெறுவதற்காக ஸாரம் அறிந்தவர் ஸ்ரீநிவாஸனுடைய தயையே ஆச்ரயிக்கிறார்கள். ஸர்வேச்வரனை ஹரியைத் தவிர வேறு ஒருவருக்கும் பாலனஸாமர்த்யம் இல்லை என்றும், கருணையே வடிவெடுத்த லக்ஷ்மிதேவியோடு கூடிய இருடீகேசன் ஸர்வஸித்தாந்தங்களிலும், வேதாந்தத்திலும் ரக்ஷகனென்று பாடப்படுகிறான் என்றும், ப்ரமாணவசனங்களை அநுஸரித்து இங்கே ஸ்ரீநிவாஸனைத் தவிர வேறு ஒருவராலும் பாலனவ்யாபாரம் ஸாத்யமில்லை என்றும் அந்த வ்யாபாரத்தில் தயாதேவி ஸ்ரீநிவாஸனை நியமித்து வைத்திருப்பதாகவும் கூறுகிறார். (41)

ப்ராஜாபத்யப்ரப்ருதிவிபவம் ப்ரேக்ஷ்ய பர்யாயது:கம்
ஜந்மாகாங்க்ஷந் வ்ருஷகிரிவநே ஜக்முஷாம் தஸ்துஷாம் வா ।
ஆசாஸாநா: கதிசந விபோஸ் த்வத்பரிஷ்வங்கதந்யை:
அங்கீகாரம் க்ஷணமபி தயே ஹார்த்ததுங்கைரபாங்கை: ॥

ப்ராஜாபத்யப்ரப்ருதிவிபவம் ப்ரேக்ஷ்ய பர்யாயதுக்கம்
ஜந்மாகாங்க்ஷந் வ்ருஷகிரிவநே ஜக்முஷாம் தஸ்துஷாம் வா ।
ஆசாஸாநா: கதிசந விபோஸ் த்வத்பரிஷ்வங்கதந்யை
ரங்கீகாரம் க்ஷணமபி தயே ஹார்ததுங்கைரபாங்கை: ॥ (42)



(பதவுரை) ஹே தயே - ஓ தயையே! கதிசந - சில பகவத்பக்தர்கள், ப்ராஜாபத்யப்ரப்ருதிவிபவம் - ப்ரஹ்மபட்டம் முதலிய ஸம்பத்தையும், பர்யாயது:கம் - துக்கத்தினுடைய நாமாந்தரமாக, ப்ரேக்ஷ்ய - பார்த்து, த்வத்பரிஷ்வங்கதந்யை: - உனது ஆலிங்கனத்தினால் பெருமை பெற்றவைகளாயும், ஹார்த்ததுங்கை: - ப்ரீதியை மேற்கொண்டவைகளுமான, விபோ: - ப்ரபுவான ஸ்ரீநிவாஸனுடைய, அபாங்கை: - கடாக்ஷங்களால், க்ஷணமபி ஒரு க்ஷணமாவது, அங்கீகாரம் - ஏற்றுக் கொள்ளுவதை, ஆசாஸாநா: - அபிலஷித்தவர்களாய்க் கொண்டு, வ்ருஷகிரிவநே - திருமலை ஆரண்யத்தில், ஜக்முஷாம் - அசையும் பொருள்களுடையவாவது, தஸ்துஷாம் வா - அசையாப் பொருள்களுடையவாவது, ஜந்ம - பிறப்பை, ஆகாங்க்ஷந் - இச்சித்தார்கள்.

"தயையே! சில மஹான்கள் ப்ருஹ்மபதம் முதலிய ஐச்வரியத்தையும் வாஸ்தவத்தில் துக்கமென்றே கண்டுகொண்டு உன்னுடைய ஸம்ச்லேஷத்தால் பெருமை பெற்றதும், ப்ரீதியினால் உயர்வு பெற்றதுமான, ஸ்ரீனிவாஸ கடாக்ஷங்களால் ஒரு க்ஷணமாவது அங்கீகாரம் கிடைத்தால் போதுமென்று மனோரதத்துடன் அதை எதிர்பார்த்துக்கொண்டு திருமலையில் அசையும் பொருள்களிலாவது அசையாப் பொருள்களிலாவது, ஏதாவது ஒரு ஜன்மத்தை ஆசைப்பட்டார்கள்."

(தாத்பர்யம்) இப்படி ஆசைப்பட்டவர்கள், யமுனை தடத்தில் ஒரு மரமாக ஜந்மம் கோரினவரும், பெருமாள் திருமொழியில் திருவேங்கடமுடையான் விஷயமாக 'ஊனேறு செல்வத்து' என்று துடங்கி 'கோனேரிவாழும் குருகாய்ப்பிறப்பேனே' என்றும், 'மீனாய்ப்பிறக்கும் விதியுடையேனாவேனே' என்றும், 'வேங்கடக்கோன் தானுமிழும்பொன்வட்டில் பிடித்து உடனே புகப்பெறுவேனே' என்றும், 'தம்பமாய் நிற்கும் தவமுடையேனாவேனே' என்றும், கடைசியில் 'எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனுமாவேனே' என்றும், பாடிய குலசேகராழ்வாரும்; அந்த மனோரதத்தை அனுசரித்து இங்கே ஸாதுக்களுடைய ஆசையின் க்ரமத்தைக் காட்டுகிறார். இவர் திருவேங்கடமுடை

யானுடைய கண்டையின் அம்சமானபடியால் இவருக்குத் திருமலையில் ஜந்மம் முன்பே ஸித்தமாயிற்று. தனக்காக அதைப் புதிதாய் வேண்டுமென்று கோரவேண்டியதில்லை. முதலில் ஜங்கமங்களாக பிறப்பில் ஆசையைக் காட்டிப் பிறகு அந்த ஜந்மம் கிடைக்க பாக்யமில்லாவிடினும் விருக்ஷங்கள் முதலிய ஸ்தாவர ஜந்மம் கிடைத்தாலும் போதுமென்கிறார். வெகுகாலம் ஒரு வ்ருக்ஷமாகத் திருமலைமேல் இருந்தாலும் ஒருக்ஷணமாவது ஸ்ரீனிவாஸனுடைய தயைநிறைந்த ப்ரீதிமயமான கடாக்ஷங்களைப் பெறப்பெற்றால் அந்த ஜன்மம் உயர்ந்ததாகும். ராமனை எவன் பார்க்கவில்லையோ, எவனை ராமன் கடாக்ஷிக்கவில்லையோ, அவன் உலகத்தார் பழிப்புக்கு இடமாவதன்றி தன்னைத்தானே அவன் பழிப்பான், என்கிற வால்மீகி வசனப்படிக்கே பகவானை நாம் தரிசனம் செய்வதுடன் அவரும் நம்மைக் கடாக்ஷித்தருளும்படி பாக்யம் பெறவேணும் என்பதைக் காட்டுகிறார். (42)

𑌨𑌾𑌭𑌿𑌪𑌦𑍍𑌮𑌸𑍍𑌫𑍁𑌰𑌣𑌸𑍁𑌭𑌗𑌾 𑌨𑌵𑍍𑌯𑌨𑍀𑌲𑍋𑌤𑍍𑌪𑌲𑌾𑌭𑌾
𑌕𑍍𑌰𑍀𑌡𑌾𑌶𑌲𑌂 𑌕𑌮𑌪𑌿 𑌕𑌰𑍁𑌣𑍇 𑌵𑍃𑌣𑍍𑌵𑌤𑍀 𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑌾𑌖𑍍𑌯𑌮𑍍 ।
𑌶𑍀𑌤𑌾 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌸𑌦𑌨𑌵𑌤𑍀 𑌶𑍍𑌰𑌦𑍍𑌦𑌧𑌾𑌨𑌾𑌵𑌗𑌾𑌹𑍍𑌯𑌾
𑌦𑌿𑌵𑍍𑌯𑌾 𑌕𑌾𑌚𑌿𑌜𑍍𑌜𑌯𑌤𑌿 𑌮𑌹𑌤𑍀 𑌦𑍀𑌰𑍍𑌘𑌿𑌕𑌾 𑌤𑌾𑌵𑌕𑍀𑌨𑌾 ॥ ॥ ௪௩ ॥

நாபீபத்மஸ்புரணஸுபகா நவ்யநீலோத்பலாபா
க்ரீடாசைலம் கமபி கருணே வ்ருண்வதீ வேங்கடாக்யம் ।
சீதா நித்யம் ப்ரஸதநவதீ ச்ரத்ததாநாவகாஹ்யா
திவ்யா காசிஜ்ஜயதி மஹதீ தீர்க்கிகா தாவகீநா ॥ (43)

(ப-ரை) 𑌹𑍇 𑌕𑌰𑍁𑌣𑍇 - ஓ தயையே! 𑌨𑌾𑌭𑌿𑌪𑌦𑍍𑌮𑌸𑍍𑌫𑍁𑌰𑌣𑌸𑍁𑌭𑌗𑌾 - நாபியிலுள்ள தாமரஸபுஷ்பத்தால் அழகு வாய்ந்த, 𑌨𑌵𑍍𑌯𑌨𑍀𑌲𑍋𑌤𑍍𑌪𑌲𑌾𑌭𑌾 - புதியதான கருநைதற்பூப் போன்ற காந்தியுள்ள, 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌶𑍀𑌤𑌾-எக்காலத்திலும் குளிர்ச்சி உள்ளதாயும், 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌸𑌦𑌨𑌵𑌤𑍀 - எப்பொழுதும் தெளிவுள்ளதாயும், (எக்காலத்திலும் ஸௌம்யதையும் அநுக்ரஹமுள்ளதாயும்) 𑌶𑍍𑌰𑌦𑍍𑌦𑌧𑌾𑌨𑌾𑌵𑌗𑌾𑌹𑍍𑌯𑌾 - விசுவாஸமுள்ளவர்களுக்கு ஸ்நாநம் பண்ணத் தருந்ததாய், 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾 - ஸர்வோத்க்ருஷ்டமாய், பரமாகாசத்திலுள்ளதாய், 𑌮𑌹𑌤𑍀 - பெரியதாய், (த்ரிவிதபரிச்சேதரஹிதமாய்) 𑌤𑌾𑌵𑌕𑍀𑌨𑌾 - உன்னுடையதாயுமிருக்கிற, 𑌕𑌾𑌚𑌿𑌤𑍍 - ஒரு, 𑌦𑍀𑌰𑍍𑌘𑌿𑌕𑌾 - நடவாவியானது, 𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑌾𑌖𑍍𑌯𑌂 - திருவேங்கடமென்று பெயரையுடைய, 𑌕𑍍𑌰𑍀𑌡𑌾𑌶𑌲𑌂 - லீலாபர்வதத்தை, 𑌵𑍃𑌣𑍍𑌵𑌤𑍀 - ஆஶ்ரயித்துக்கொண்டு, 𑌜𑌯𑌤𑌿 - ஸர்வோத்க்ருஷ்டமாகப் பிரகாசிக்கிறது.

"கருணையே? தாமரைப்பூவின் ப்ரகாசத்தால் அழகாயும் அப்பொழுதலர்ந்த கருநெய்தல் பூவைப்போல் காந்தி உள்ளதாயும் எக்காலத்திலும் ப்ரஸன்னமாயும், சீதமாயும், ச்ரத்தையுள்ளவர்களால் அவகாஹநம் செய்யத்தக்கதாயும், மிகப் பெரிதாயும், உள்ள உன்னுடையதான ஒரு தீர்க்கிகை என்னும் வாபி வேங்கடமென்னும் ஒரு விலக்ஷணமான க்ரீடா பர்வதத்தை ஆச்ரயித்துக்கொண்டு விளங்குகிறது."

(தா-ம்) இங்கே ஸ்ரீனிவாஸனுடைய திருமேனியை ஒரு குளிர்ந்த நடைவாபியாக வர்ணிக்கிறார். அந்தத் திருமேனியில் நாபீகமலம் என்னும் உயர்ந்த தாமரை உளது. புதிய கருநெய்தல் புஷ்பம்போன்ற காந்தி அந்தத் திருமேனியில் ஓடுகிறது. தாபத்ரயங்களையும் அந்தத் திருமேனியின் குளிர்ச்சி சமனம் செய்யவல்லது. ச்ரத்தையுள்ளவரெல்லாம் அந்தத் திருமேனியின் குளிர்ச்சியை அனுபவிக்கலாம். தயாதேவியின் விளையாட்டிற்காக ஸ்ரீநிவாஸன் திருமேனி என்கிற இந்த நடைவாபி ஏற்பட்டிருக்கிறதுபோலும்! என்று இங்கே வர்ணிக்கிறார். இந்தத் திருமேனியின் காந்தி நீரோட்டத்தில் ஈடுபடும்பொழுது கருநிறமான அந்தக் காந்தி ஜலத்தில் நீலோத் பல புஷ்பங்கள் மிதப்பதுபோல் அநுபவம். அந்தத் திருமேனியை அனுபவிப்பதற்கு ச்ரத்தையென்னும் வித்தம் வேண்டும். ச்ரத்தை அதை அனுபவிப்பதற்கு அதிகாரத்தைக் கொடுக்கும். வேறு ஜாதி குலம் வேண்டியதில்லை. (43)

𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌦𑍃𑌷𑍍𑌟𑍇 𑌤𑌦𑌿𑌤𑌰𑌸𑍁𑌖𑍈𑌰𑍍𑌗𑌮𑍍𑌯𑌤𑍇 𑌗𑍋𑌷𑍍𑌪𑌦𑌤𑍍𑌵𑌂
𑌸𑌤𑍍𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌤𑍍𑌰𑌿𑌭𑌿𑌰𑌵𑌧𑌿𑌭𑌿𑌰𑍍𑌮𑍁𑌕𑍍𑌤𑌮𑌾𑌨𑌨𑍍𑌦𑌸𑌿𑌨𑍍𑌧𑍁𑌮𑍍 ।
𑌤𑍍𑌵𑌤𑍍𑌸𑍍𑌵𑍀𑌕𑌾𑌰𑌾𑌤𑍍𑌤𑌦𑌿𑌦𑌮𑌖𑌿𑌲𑌂 𑌕𑍃𑌤𑌿𑌨𑌃 𑌸𑌂𑌵𑌿𑌵𑍍𑌯𑌨𑍍𑌤𑌾𑌨𑌨𑍍𑌯𑌹𑌾𑌰𑍍𑌯𑌂
𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌨𑌿𑌧𑌿𑌮𑌿𑌵 𑌦𑌯𑍇 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑍍𑌯𑌞𑍍𑌜𑌨𑌾𑌦𑍍𑌰𑍌 ॥

யஸ்மிந் த்ருஷ்டே ததிதரஸுகைர்கம்யதே கோஷ்பதத்வம்
ஸத்யம் ஜ்ஞாநம் த்ரிபிரவதிபிர்முக்தமாநந்தஸிந்தும் I
த்வத்ஸ்வீகாராத்தமிஹ க்ருதிந: ஸூரிப்ருந்தாநுபாவ்யம்
நித்யாபூர்வம் நிதிமிவ தயே நிர்விசந்த்யஞ்ஜநாத்ரௌ II

(ப-ரை) ஹே தயே - ஓ தயையே! யஸ்மிந் - எந்த, பரம புருஷன், த்ருஷ்டே ஸதி - காணப்பட்டிருக்குமளவில், ததிதர ஸுகை: - அவனிற்காட்டில் (அவன் தர்சனத்திற்காட்டில்) வேறுபட்ட ஆநந்தங்களாலே, கோஷ்பதத்வம் - மாட்டுக் குளப் படியாயிருக்குகை, கம்யதே - அடையப்படுகிறதோ, ஸத்யம் - விகாரசூந்யனாயும், ஜ்ஞாநம் - ஜ்ஞாநஸ்வரூபனாய், த்ரிபி:, மூன்று, அவதிபி: - அளவுகளால், முக்தம் - விடப்பட்டிருக்கிற தாயும், ஆநந்தஸிந்தும் - ஆநந்தக் கடலாயும், ஸூரிப்ருந்தா நுபாவ்யம் - நித்யமுக்தர்களின் கூட்டங்களாலே அநுபவிக்கத் தகுந்தவனாயும், நித்யாபூர்வம் - ஸர்வகாலத்திலும் புதிய தாயுள்ள, தம் - அந்த பரமபுருஷனை, த்வத்ஸ்வீகாராத் - உன் னுடைய அங்கீகாரத்தாலே, இஹ - இந்த ஸம்ஸாரமண்டலத் தில், க்ருதிந: - பாக்யவான்கள், நிதிமிவ - நிதியைப்போல நிர்விசந்தி - அநுபவிக்கிறார்கள், அஞ்ஜநாத்ரௌ - அஞ்ஜநமலையில்.

"தயையே? யாரைக்கண்டவளவில் வேறு ஸுகங்களெல்லாம் மாட்டுக் குளப்படிபோல் மிக அல்பமாகுமோ, மூன்று எல்லை களும் நீங்கிய ஸத்யமும்,ஜ்ஞானமும், அநந்தமுமான, நித்யஸூரி கள் அனுபவிக்கத்தக்க அந்த ஆநந்த ஸமுத்திரத்தை உன்னு டைய அங்கீகாரத்தால் பாக்யமுள்ளவர்கள் நித்யாபூர்வமான நிதியைப்போல் இந்த அஞ்ஜன மலையில் அனுபவிக்கிறார்கள்."

(தா-ம்) முன் சுலோகத்தில் ஸ்ரீநிவாஸனுடைய திருமே னியை ஒரு குளிர்ந்த நடைவாபியாக அநுபவித்தார். இங்கே அவ ருடைய திவ்யாத்ம ஸ்வரூபத்தை ஒரு எல்லையில்லாத ஆநந்த ஸமுத்ரமாக அனுபவிக்கிறார். இந்த ஸமுத்ரத்தை அனுபவிக் கும் கால் உலகத்திலுள்ள உயர்ந்த மற்ற ஸுகங்களெல்லாம் ஒரு குளப்படி நீராகும். பகவானுடைய திவ்யாத்ம ஸ்வரூ



பத்தை தைத்திரீயோபநிஷத்தில் ஸத்யம், ஜ்ஞாநம், அநந்தம் என்று ஸ்வரூபலக்ஷணத்தால் வர்ணிக்கப்பட்டது. அந்த ப்ரஹ்ம ஸ்வரூபத்தையே ஆநந்தமயமென்றும், அந்த ஆநந்தம் வாக்குக் கும் மனதிற்கும் எட்டாததென்றும், அங்கே கூறப்பட்டது. அந்த உபநிஷத்திலுள்ள ஸத்யம், ஜ்ஞானம், என்கிற பதங்களை இந்த ச்லோகத்தில் அப்படியே அமைத்துவிட்டு அநந்தமென் கிற பதத்தின் அர்த்தத்தை இங்கே 'மூன்று எல்லைகளும் நீங் கியது' என்று விளக்குகிறார். ப்ரஹ்மத்தைத்தவிர மற்றப்பொ ருள்களுக்கெல்லாம் தேசபரிச்சேதமென்றும், காலபரிச்சேத மென்றும், வஸ்துபரிச்சேதமென்றும், மூன்று எல்லைகள் உண்டு. ஒரு தேசத்தில் உள்ளது மற்றொரு தேசத்தில் இல்லாததென்று சொல்லக்கூடிய பொருள் தேசபரிச்சேதமுள்ளதாகும். ப்ரஹ்மம் இன்ன இடத்தில் மட்டும் உள்ளது இன்ன இடத்தில் இல்லா தது என்று சொல்லமுடியாது. ஒரு காலத்திலுள்ளது, மற்றொரு காலத்தில் இல்லாதது என்று சொல்லக் கூடிய பொருள்கள் கால பரிச்சேதமுள்ளவை. ப்ரஹ்மம் இன்ன காலத்தில் மட்டும் உள் ளது, இன்ன காலத்தில் இல்லாதது என்று சொல்லக்கூடியதல்ல. ஒவ்வொரு பொருளும் அந்தந்தப் பொருளாகுமே ஒழிய வேறு பொருளாகாது. மண் மண்ணையொழிய ஜலமாகாது. ப்ரஹ்மமோ உன்றால் எல்லா வஸ்துவுமாகும். எப்பொருள்களும் ப்ரஹ்மத்தின் உருவமேயாகும். ப்ரஹ்மமல்லாத பொருளில்லை. இன்ன பொருள் தான் ப்ரஹ்மம் இன்னது ப்ரஹ்மமன்று என்று சொல்வது கூடாது. ப்ரஹ்மம் தவிர மற்றப் பொருள்களுக்கெல்லாம் வஸ்து பரிச்சேதம் உண்டு. ப்ரஹ்மத்துக்கு மட்டும் அந்த எல்லை கிடை யாது. உபநிஷத்தில் 'ஆநந்தமயன்' என்று சொல்லப்பட்டதை இங்கே ஆநந்தஸிந்து என்கிறார். குகையில் நிதியைப்போல் ப்ரஹ்மம் மறைந்துளது என்று அந்த உபநிஷத்தில் கூறப்பட் டது. அஞ்ஜனமென்னும் மையைக்கொண்டு நிதியைக் கண்டுபிடிக் கலாமென்பர். இந்த அஞ்ஜநமலையில் ஸ்ரீநிவாஸனென்னும் நிதி எல்லோரும் காண விளங்குகிறது. இந்த நிதி அநுபவிக்க அநு பவிக்க எப்பொழுதும் புதியதாகவே இருக்கும். இது ஆராத அமுதம். அபர்யாப்தமான அமிர்தம் திகட்டாத இன்பம். இந்த அம்ருதத்தை நித்யஸூரிகளும் பரமபதத்திலிருந்து அநுபவிக்க வருகிறார்கள். 'தண்ணார் வேங்கட விண்ணோர் வெற்பு' என்கிற பாசுரத்தை நினைக்கிறார்.

முன் ச்லோகங்களில் பெருமாளுடைய திருமேனியாகிய நீண்ட வாபியில் வேங்கடமலை ஓர் விளையாட்டு மலையைப்போல் காண்கிறதென்றார். இங்கே அஞ்ஜநமலையில் பெருமாளுடைய எல்லையில்லாத ஆநந்தஸ்வரூபமாகிய நிரதிசயப்ருஹத்தான திவ்யாத்மஸ்வரூபம் விளங்குகிறது என்கிறார். ப்ரஹ்மஸ்வரூபம் மூன்று விதமான எல்லைகளில்லாத பெரியதாயிருந்தாலும், ஹ்ருதயமென்னும் குஹைக்குள் ஓர் நிதியைப்போல அநந்தமான ப்ரஹ்மம் மறைந்து கிடக்கிறதென்றும், அங்கே அன்போடு தேடினால் அந்த நிதி பெருமாளுடைய க்ருபை என்றும், அஞ்ஜநத்தால் ஜ்ஞாநக்கண்ணுக்கு அநுபவகோசரமாவதாக தைத்திரீய ச்ருதி ஓதுகிறது. 'நிஹிதம்' என்ற ச்ருதி சப்தத்திற்கு 'நிதிபோல் வைக்கப்பட்டுளது' என்று பொருள். அல்பமான ஹ்ருதயத்திற்குள் ஹிரண்யநிதியாக ப்ரஹ்மம் உள்ளே ஸூக்ஷ்மரூபமாக இருப்பதாக தஹரவித்யை ஓதுகிறது. அதற்கு அநுகுணமாக 'நிஹிதம்' என்பதற்கும் 'நிதிபோலுள்ளது' என்று பொருள் கொள்ளுவது உசிதமே. பூமிக்குள் மறைந்து கிடக்கும் நிதியை அஞ்ஜநமென்னும் மையைக் கண்ணில் தடவிக்கொண்டு ஸுலபமாய்க் காணலாமென்பர். இங்கே ஒருமலை ப்ரவாஹமாக அஞ்ஜநமுளது. மலையே அஞ்ஜநமலை. அது தயையின் மூர்த்தி என்று முதல் சுலோகத்திலேயே ஸாதித்தார். இந்த அஞ்ஜநமலையை நாம் ஸேவித்துக்கொண்டு அதை நெருங்கி அதில் ஸஞ்சரிக்கையில், அது எல்லையில்லாத இன்பமான ஆநந்தமயப்ரஹ்மஸ்வரூபத்தை நமக்குத் தெரியச் செய்கிறது. இந்த ஆநந்தநிதியைக் கூட்டம் கூட்டமாகக் கூடிச் சேர்ந்து அநுபவிக்கவேணும். இந்த நிதியை அடைவதற்கு யாதொரு பொருள் செலவும் இல்லை. எத்தனைக்கெத்தனை பாகவதர்கள் கூட்டம் அதிகமாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு எல்லோருக்கும் ஆநந்தாதிக்யம். அவரவர்கள் முதலுக்குத் தக்கபடி ஏற்றத் தாழ்ச்சியாக ஆநந்தத்தில் பாகமென்பது இல்லை. ஆநந்தம் எல்லாருக்கும் ஸமம். (44)

ஸாரம் லப்த்வா கமபி மஹத: ஸ்ரீநிவாஸாம்புராசே:
காலே காலே கநரஸவதீ காளிகேவாநுகம்பே |
வ்யக்தோந்மேஷா ம்ருகபதிகிரௌ விச்வமாப்யாயயந்தீ
சீலோபஜ்ஞம் க்ஷரதி பவதீ சீதலம் ஸத்குணௌகம் ||



ஸாரம் லப்த்வா கமபி மஹத: ஸ்ரீநிவாஸாம்புராசே:
காலே காலே கநரஸவதீ காளிகேவாநுகம்பே |
வ்யக்தோந்மேஷா ம்ருகபதிகிரௌ விச்வமாப்யாயந்தீ
சீலோபஜ்ஞம் க்ஷரதி பவதீ சீதலம் ஸத்குணௌகம் ||

(ப-ரை) ஹே அநுகம்பே - ஓ தயையே! கநரஸவதீ - ஆச்ரிதர் பக்கல் த்ருடமான ஸ்நேஹமுள்ளவளாய், (உச்சதரமான கர்ஜநமுள்ளவளாய், ஸாதாரணமாய் ஜலமுள்ளவளாய்) ஸ்ரீநிவாஸாம்புராசே: - ஸமுத்ரம்போன்ற ஸ்ரீநிவாஸனிடத்திலிருந்து, (ஸ்ரீநிவாஸன்போன்ற ஸமுத்ரத்தினிடத்திலிருந்து) கமபி - விலக்ஷணமான, ஸாரம் - ஜலத்தை, (ஸாராம்சத்தை) லப்த்வா - அடைந்து, ம்ருகபதிகிரௌ - ஸிம்ஹாசலம் என்று பெயருடைய திருமலையில், (ஸிம்ஹங்கள் வஸிக்கும் மலையில்) வ்யக்தோந்மேஷா - ப்ரகாசமான ஆவிர்ப்பாவத்தை உடைய, பவதீ - நீ, காளிகேவ - மேகபங்க்திபோல், விச்வம் - ப்ரபஞ்சத்தை, ஆப்யாயயந்தீ ஸதீ - ஸந்தோஷிப்பிக்கவேணும் என்ற அபிப்ராயமுள்ளவய்க்கொண்டு, காலே காலே - அந்த அந்தக் காலங்கள்தோறும், சீலோபஜ்ஞம் - ஸௌசீல்யத்தை முதலாக உடைய, சீதலம் - குளிர்ந்த, ஸத்குணௌகம் - ப்ரவாஹம்போன்ற பகவத் கல்யாணகுணத்தை, (கல்யாணகுணங்கள்போன்ற ப்ரவாஹத்தை) க்ஷரதி - வர்ஷிக்கிறாய். (ஸ்வயம் வா) சீலோபஜ்ஞம் - ஸ்வபாவஸித்தமாக, க்ஷரதி - வர்ஷிக்கிறாய்.

"அநுகம்பையே! மிகப் பெரியதான ஸ்ரீநிவாஸஸமுத்ரத்திலிருந்து விலக்ஷணமான ஸாரத்தை க்ரஹணம் செய்து அந்த அந்தக் காலங்களில் கனரஸத்தோடுகூடிய மேகமாலையைப்போல் ஸிம்ஹாசலத்தில் ஆவிர்பவித்து ஜகத்தை எல்லாம் குளிர்ச்சி அடைவிக்க ஸௌசீல்யம் முதலிய குளிர்ந்த வாத்ஸல்யகுணங்களை வர்ஷிக்கிறாய்."

(தா-ம்) மேகங்கள் ஸமுத்ரத்திலிருந்து ஜலத்தை ஆவிரூபமாக க்ரஹணம் செய்து உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்கிற பேதமில்லாமல் எல்லோருக்கும் ஸமமாகக் குளிர்ந்த ஜலமாக வர்ஷிக்கும். இங்கே [illegible] சில

விசேஷணங்களில் ச்லேஷையால் இரண்டர்த்தம் கொள்ளவேண்டும். கனரஸவதீ என்பதற்குக் கனமான ரஸமென்னும் ப்ரீதி உடையவள் என்று தயாவிஷயத்திலும், மேகத்தின் கர்ஜனத்தை உடையது என்று மேகமாலாவிஷயத்திலும் அர்த்தம். தயையை முன்பு நதியாகவும், ஸமுத்ரமாகவும், வ்ருக்ஷமாகவும் வர்ணித்திருக்கிறார். இங்கே தயையை மலையினுச்சியிலுள்ள மேகமாலையாக வர்ணிக்கிறார். மேகம் பக்ஷபாதமில்லாமலும், உயர்வு தாழ்வு கவனியாமலும் ஸமமாக எல்லா ஸ்தலங்களிலும் வர்ஷிப்பதுபோல தயையின் ஸ்வபாவம். விச்வம் என்பது உயர்ந்தது தாழ்ந்தது ஆகிய எல்லாவற்றையும் காட்டுகிறது. இங்கே சீலமென்பது ஸௌசீல்யத்தைச் சொல்லுகிறது. உயர்ந்தவன் தாழ்ந்தவரோடு நெருங்கி பேதமில்லாமல் அணைந்து வர்த்திப்பது ஸௌசீல்ய குணமென்பர். இது தயையால் ஏற்படும் குணங்களில் முதன்மையானதாகும். ஸௌசீல்யம், ஸௌலப்யம், வாத்ஸல்யம் முதலிய கல்யாணகுணங்கள் தயையினுடைய பரிவாஹங்கள். அதனால் தயையென்னும் மேகமாலை அந்தக் குணங்களை வர்ஷிக்கிறதாக வர்ணிக்கிறார். (45)

𑌭𑍀𑌮𑍇 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌭𑌵𑌜𑌲𑌨𑌿𑌧𑍌 𑌮𑌜𑍍𑌜𑌤𑌾𑌂 𑌮𑌾𑌨𑌵𑌾𑌨𑌾𑌂
𑌆𑌲𑌮𑍍𑌬𑌾𑌰𑍍𑌥𑌂 𑌵𑍃𑌷𑌗𑌿𑌰𑌿𑌪𑌤𑌿𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑍍𑌨𑌿𑌦𑍇𑌶𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌯𑍁𑌙𑍍𑌕𑍍𑌤𑍇 ।
𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌸𑌾𑌰𑌂 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌮𑌹𑌤𑌾 𑌮𑍂𑌲𑌭𑌾𑌗𑍇𑌨 𑌜𑍁𑌷𑍍𑌟𑌂
𑌶𑌾𑌖𑌾𑌭𑍇𑌦𑍈𑌸𑍍𑌸𑍁𑌭𑌗𑌮𑌨𑌘𑌂 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌪𑌾𑌣𑌿𑌮𑍍 ॥

பீமே நித்யம் பவஜலநிதௌ மஜ்ஜதாம் மாநவாநாம்
ஆலம்பார்த்தம் வ்ருஷகிரிபதிஸ்த்வந்நிதேசாத் ப்ரயுங்க்தே ।
ப்ரஜ்ஞாஸாரம் ப்ரக்ருதிமஹதா மூலபாகேந ஜுஷ்டம்
சாகாபேதைஸ்ஸுபகமநகம் சாச்வதம் சாஸ்த்ரபாணிம் ॥

(ப-ரை) 𑌵𑍃𑌷𑌗𑌿𑌰𑌿𑌪𑌤𑌿𑌃 - ஸ்ரீநிவாஸன், 𑌤𑍍𑌵𑌨𑍍𑌨𑌿𑌦𑍇𑌶𑌾𑌤𑍍 - உனது நியமனத்தினால், 𑌭𑍀𑌮𑍇 - பயங்கரமான, 𑌭𑌵𑌜𑌲𑌨𑌿𑌧𑍌 - ஸம்ஸாரஸாகரத்தில், 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 - எக்காலத்திலும், 𑌮𑌜𑍍𑌜𑌤𑌾𑌂 - முழுகாநிற்கிற, 𑌮𑌾𑌨𑌵𑌾𑌨𑌾𑌂 - மனுஷ்யர்களுடைய, 𑌆𑌲𑌮𑍍𑌬𑌾𑌰𑍍𑌥𑌂 - கைப்பிடிக்காக, 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌸𑌾𑌰𑌂 - ஜ்ஞானத்தையேஸாராம்சமாகவுடையதாய், 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌮𑌹𑌤𑌾 - தனக்குப் பிரக்ருதியான அகாரத்தாலே பெருமை பெற்றதான, 𑌮𑍂𑌲𑌭𑌾𑌗𑍇𑌨 - வேதத்



துக்கு மூலபூதமான ப்ரணவத்தால், 𑌜𑍁𑌷𑍍𑌟𑌂 - அடையப்பட்டதாய, 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌮𑌹𑌤𑌾 - ஸ்வபாவத்தாலே பருமனுள்ளதான 𑌮𑍂𑌲𑌭𑌾𑌗𑍇𑌨 - தோள் முதலிய அவயவப்பாகத்தால், 𑌶𑌾𑌖𑌾𑌭𑍇𑌦𑍈𑌃 - வேதசாகாவிசேஷங்களாலே, 𑌸𑍁𑌭𑌗𑌂 - மனோஹரமாய், 𑌶𑌾𑌖𑌾𑌭𑍇𑌦𑍈𑌃- பலவிதமான விரல்களாலே, 𑌸𑍁𑌭𑌗𑌂 - ஸுந்தரமாய், 𑌅𑌨𑌘𑌂 - நிர்தோஷமாய், 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌂 - அழிவற்றதாய் இருக்கும், 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌪𑌾𑌣𑌿𑌂 - சாஸ்த்ரமாகிற கையை, 𑌪𑍍𑌰𑌯𑍁𑌙𑍍𑌕𑍍𑌤𑍇 - ப்ரயோகிக்கிறாய். (அதாவது கொடுக்கிறாய்)

"உன்னுடைய நியமநத்தால் வேங்கடபதியானவர் பயங்கரமான ஸம்ஸாரஸமுத்ரத்தில் எப்பொழுதும் முழுகிக்கொண்டே இருக்கும் மானிடர்களுக்குக் கரையேறக் கைப் பிடிப்புக்காக ஜ்ஞானஸாரமாயும், தனக்கு வேரான ப்ரணவமென்னும் மூலத்தோடு கூடியதாயும், விரல்களென்னும் சாகைகளால் அழகாயும் நிர்தோஷமாயுமுள்ள சாச்வதமான சாஸ்த்ரமாகிற கையை அளிக்கிறான்."

(தா-ம்) முன் சுலோகங்களில் ஸாரமான குணங்கள் தயையால் வர்ஷிக்கப்படுகிறதையும், பகவத்ஸ்வரூபமான ஆனந்தஸமுத்ரத்தில் ச்ரத்தையுள்ளவர்கள் முழுகி ஆநந்திக்கலாமென்பதையும் கூறினார். பயங்கரமான ஸம்ஸாரஸமுத்ரத்தில் முழுகியிருப்பவர்கள் யாராவது காருணிகர்கள் கைகொடுத்து அதிலிருந்து கரையேற்றிவிட்டாலல்லவோ முற்கூறிய ஆநந்தக்கடலில் முழுகலாம். ஸம்ஸாரஸமுத்ரத்திலிருந்து நம்மை உத்தாரணம் செய்ய பகவான் காருண்யத்தால் சாஸ்த்ரமென்னும் கையை நீட்டுகிறான். சாஸ்த்ரத்தை ப்ரவர்த்திப்பது கருணையின் கார்யம். இங்கே சாஸ்த்ரத்தை திருக்கையாக ரூபணம் செய்கிறார். இங்கே கூறும் விசேஷணங்கள் ச்லேஷையால் சாஸ்த்ரத்திற்கும் கைக்கும் பொருந்தும். வேதசாஸ்த்ரத்திற்கு மூலம் ப்ரணவம். ப்ரணவத்திற்கு ப்ரக்ருதி, அதாவது- மூலம், அகாரமென்னும் முதலெழுத்து. அது ஸமஸ்தமான சப்தராசிகளுக்கும் காரணமானது. ப்ரணவத்திற்கும் அகாரத்தால் ஏற்றம். கைக்கு மூலபாகம் திருத்தோள்கள் முதலிய அவயவமாகும். மஹாபுருஷனாகிய பகவானுக்கு ஸாமுத்

ரிகாலக்ஷணசாஸ்த்ரப்படிக்கு ஸ்வபாவமாய்ப் பருத்திருக்கும். வேதவ்ருக்ஷத்திற்குப் பல சாகைகள் இருப்பதுபோல் கையில் அழகான விரல்கள் உள்ளன. விரல்களுக்கும் சாகை என்று பெயர். பாஞ்சராத்ரசாஸ்த்ரத்திற்கு மூலம் மூலவேதம் என்கிற ஏகாயந ச்ருதி. இங்கே மூலபாகமென்பதால் அடுத்த சுலோகத்தால் சொல்லப்போகிற பாஞ்சராத்ரசாஸ்த்ரத்திற்கு ஆதாரமான மூலவேதத்தையும் ஸூசிக்கிறார். (46)

𑌵𑌿𑌦𑍍𑌵𑌤𑍍𑌸𑍇𑌵𑌾𑌕𑌤𑌕𑌨𑌿𑌕𑌷𑍈𑌰𑍍𑌵𑍀𑌤𑌪𑌙𑍍𑌕𑌾𑌶𑌯𑌾𑌨𑌾𑌮𑍍
𑌵𑍃𑌷𑌗𑌿𑌰𑍀𑌶𑌃 𑌪𑍍𑌰𑌣𑌯𑌤𑌿 𑌦𑌯𑍇 𑌦𑌰𑍍𑌪𑌣𑌂 𑌤𑍇 𑌸𑍍𑌵𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑍍 ।
𑌲𑍀𑌲𑌾𑌦𑌕𑍍𑌷𑌾𑌂 𑌤𑍍𑌵𑌦𑌨𑌵𑌸𑌰𑍇 𑌲𑌾𑌲𑌯𑌨𑍍𑌵𑌿𑌪𑍍𑌰𑌲𑌿𑌪𑍍𑌸𑌾𑌂
𑌮𑌾𑌯𑌾𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑍍𑌯𑌪𑌿 𑌦𑌮𑌯𑌿𑌤𑍁𑌂 𑌤𑍍𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑌪𑌨𑍍𑌨𑌪𑍍𑌰𑌤𑍀𑌪𑌾𑌨𑍍 ॥

வித்வத்ஸேவாகதகநிகஷைர்வீதபங்காசயாநாம்
பத்மாகாந்த: ப்ரணயதி தயே தர்ப்பணம் தே ஸ்வசாஸ்த்ரம் ।
லீலாதக்ஷாம் த்வதநவஸரே லாளயந் விப்ரலிப்ஸாம்
மாயா சாஸ்த்ராண்யபி தமயிதும் த்வத்ப்ரபந்நப்ரதீபாந் ॥

(ப-ரை) 𑌹𑍇 𑌦𑌯𑍇 - ஓ தயையே! 𑌵𑍃𑌷𑌗𑌿𑌰𑍀𑌶𑌃 - ஸ்ரீநிவாஸன், 𑌵𑌿𑌦𑍍𑌵𑌤𑍍𑌸𑍇𑌵𑌾𑌕𑌤𑌕𑌨𑌿𑌕𑌷𑍈𑌃 - வித்வான்களுடைய பரிசரணங்களாகிற தேத்தாங்கொட்டையின் உரைத்தல்களாலே, 𑌵𑍀𑌤𑌪𑌙𑍍𑌕𑌾𑌶𑌯𑌾𑌨𑌾𑌂 - பாபமொழிந்த சித்தமுள்ளவர்களுக்காக, (சேறு போயிருக்கும் ஜலாதாரபாத்ரத்தை உடையவர்க்காக) 𑌤𑍇 - உனக்கு, 𑌦𑌰𑍍𑌪𑌣𑌂 - கண்ணாடியான, 𑌸𑍍𑌵𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 - தன்னுடைய சாஸ்த்ரத்தை, 𑌪𑍍𑌰𑌣𑌯𑌤𑌿 - பண்ணுகிறான். 𑌤𑍍𑌵𑌦𑌨𑌵𑌸𑌰𑍇 - நீ இல்லாத ஸமயத்தில், 𑌲𑍀𑌲𑌾𑌦𑌕𑍍𑌷𑌾𑌂 - லீலையில் ஸமர்த்தையான, 𑌵𑌿𑌪𑍍𑌰𑌲𑌿𑌪𑍍𑌸𑌾𑌂 - வஞ்சக இச்சையை, 𑌲𑌾𑌲𑌯𑌨𑍍 - கொண்டாடாநின்றுகொண்டு, 𑌤𑍍𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑌪𑌨𑍍𑌨𑌪𑍍𑌰𑌤𑍀𑌪𑌾𑌨𑍍 - உன் ஆச்ரிதவிரோதிகளை, 𑌦𑌮𑌯𑌿𑌤𑍁𑌂 - சிக்ஷிப்பதற்கு, 𑌮𑌾𑌯𑌾𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑍍𑌯𑌪𑌿 - மோஹநசாஸ்த்ரங்களையும், 𑌪𑍍𑌰𑌣𑌯𑌤𑌿 - செய்கிறான்.

"மஹான்களான தத்வஜ்ஞானிகளுடைய ஸேவை என்கிற தேத்தாங்கொட்டையின் ப்ரபாவத்தால் பாபமென்னும் சேறு முழுவதும் நீங்கி சுத்தியடைந்த மனதுடையவர்களின் ப்ரயோஜனத்திற்காக உனக்குக் கண்ணாடிபோன்ற பகவத் சாஸ்த்ரத்தை ஸ்ரீநிவாஸன் ஏற்படுத்துகிறான். நீ அருகே இல்லாத ஸமயத்தில் லீலையில் ஸமர்த்தையான ஏமாற்றும் இச்சையை லாலநம் செய்துகொண்டு உன்னைச் சரணமடைந்தவர்களுக்கு விரோதிகளான ஆஸுரப்ரக்ருதிகளை நிக்ரஹிப்பதற்காக மோஹசாஸ்த்ரங்களையும் செய்கிறான்."

(தா-ம்) வேதசாஸ்த்ரமென்னும் கையைக்கொடுத்து ஸம்ஸாரஸமுத்ரத்திலிருந்து நம்மை உத்தாரணம் செய்வதாகக் கூறினார். வேதசாஸ்த்ரங்களில் இந்த்ரன் முதலிய அநேகதேவதைகளையும் அவர்கள் தயையும் ஸ்தோத்ரம் செய்யப்படுகிறது. ஸ்ரீநிவாஸனுடைய தயைதான் ஸத்யமென்றும், மற்றவர்களுடைய தயை கானல் ஜலம்போல் வெறும் தோற்றமென்றும் முன்தசகத்தில் இறுதியில் கூறினார். வேதசாஸ்த்ரத்தில் எல்லா தேவதைகளையும் ஸ்தோத்ரம் செய்வதால் ஸ்ரீநிவாஸனுடைய தயையைத்தான் அவலம்பிப்பது என்பது எப்படி ஏற்படும்? சாஸ்த்ரம் என்பதில் சேர்ந்த சில புராணங்கள் ப்ரஹ்மாதிதேவதைகளையும் உத்தமதேவதைகளாகச் சொல்லுகின்றனவே! அந்தப் புராண சாஸ்த்ரங்கள் கருணையால் ஏற்பட்டதாகுமோ? இப்படி வரும் ஆக்ஷேபங்களை இந்த சுலோகத்தில் பரிஹரிக்கிறார். பாஞ்சராத்ராகமங்களை பகவத் சாஸ்த்ரமென்று சொல்லுவர். இந்த சாஸ்த்ரத்தில் பகவானுடைய பெருமையை மட்டும் கண்ணாடியிற்போல தெளிவாகக் காட்டப்படுகிறது. வேறு தேவதைகளை அந்த சாஸ்த்ரத்தில் ப்ரசம்ஸிப்பதில்லை. அந்த சாஸ்த்ரம் தயாதேவிக்குக் கண்ணாடிபோலாகும். தயாதேவி அந்த சாஸ்த்ரக் கண்ணாடியில் நன்றாய் ப்ரதிபலிக்கிறாள். பெரியோர்களை நீடித்த காலம் ஆச்ரயித்து அவர்கள் ஸேவை என்னும் தேத்தாங்கொட்டையால் மனதிலுள்ள சேற்றைப்போக்கி நன்றாய்த் தெளியச்செய்து நிர்மலமான மனதுடையவர்களுக்குப் பகவானுடைய பெருமையையும், தத்வத்தையும் உள்ளபடி தெளியக்காட்ட இந்த பாகவதசாஸ்த்ரம் தயாதேவியின் முகோல்லாஸத்திற்கு ஒரு முகக் கண்ணாடிபோல் ஸ்ரீநிவாஸனால் ஏற்படுத்தப்பட்டது. மற்ற மாயாசாஸ்த்ரங்கள் ஆஸுரப்ரக்ருதிகளுக்கு மோஹத்தை அவர்கள் பாபங்களுக்குப் பலமாக வ்ருத்தி செய்வதற்காக லீலாதேவியின் லாலனமாக ஏற்படுத்தப்படுவது. ஸாத்விகப்ருக்ருதியுள்ளவர் அந்த மாயாசாஸ்த்ரங்களினால் ஏமாறமாட்டார்கள். (47)

தைவாத் ப்ராப்தே வ்ருஷகிரிதடம் தேஹிநி த்வந்நிதாநாத்
ஸ்வாமிந் பாஹீத்யவசவசநே விந்ததி ஸ்வாபமந்த்யம் ।
தேவ꞉ ஸ்ரீமாந் திசதி கருணே த்ருஷ்டிமிச்சம் ஸ்த்வதீயாம்
உத்காதேந ச்ருதிபரிஷதாமுத்தரேணாபிமுக்யம் ॥ (48)

(ப-ரை) ஹே கருணே - ஓ தயையே! த்வந்நிதாநாத் - உன்னைக் காரணமாக உடையதாய், (அதாவது— ஒருகால்விசேஷத்தில் உன்னாலே ப்ரவர்த்திதமாயிருக்கும் யாத்ருச்சிகஸுக்ருதாதிரூபமாயிருக்கும் பாக்யவிசேஷத்தாலென்னபடி) வ்ருஷகிரிதடம் - திருமலையின் தாழ்வரையை, ப்ராப்தே - அடைந்திருக்கும், தேஹிநி - ப்ராணியானவன், த்வந்நிதாநாத் - நீயாகிற காரணத்தினால், ஹே ஸ்வாமிந் - ஸ்வாமியே! பாஹி - ரக்ஷிக்கக்கடவாய், இதி - என்று, அவசவசநே - தனக்கு ஸ்வாதீநமில்லாத வார்த்தையை உடையவனாய்க்கொண்டு, அந்த்யம் ஸ்வாபம் - கடைசி தூக்கத்தை, (மரணத்தை) விந்ததி ஸதி - அடையாநிற்குமளவில், தேவ꞉ - ஸர்வலோகநாதனான, ஸ்ரீமாந் - ஸ்ரீநிவாஸன், த்வதீயாம் - உன்னுடையதான, த்ருஷ்டிம் - கடாக்ஷத்தை, இச்சந் - ஆசைப்படாநின்றுகொண்டு, ச்ருதிபரிஷதாம் - வேதஸமூஹங்களுக்கு, உத்காதேந - ஆரம்பமாயிருக்கிற, உத்தரேண - பதில் வார்த்தையினால், (அதாவது — வேதங்களுக்கு நியமேந ப்ரதமத்தில் படிக்கப்படுகிற ஓங்காரத்தால் என்றபடி) ஆபிமுக்யம் - முன் வந்து நிற்கும் தன்மையை, திசதி - கொடுக்கிறான்.

"கருணையே! ஸுக்ருதவிசேஷத்தால் உன்னுடைய அநுக்ரஹத்தால் திருமலையின் தாழ்வரையை அடையப் பாக்யம்பெற்ற ப்ராணியானவன் உன்னுடைய ப்ரேரணையால் தன்னை அறியாமல் 'ஸ்வாமி என்னை ரக்ஷிக்கவேண்டு'மென்று சொல்லிக் கண்மூடுங்கால், ஸ்ரீநிவாஸன் உன்னுடைய கடாக்ஷத்தைப் பெற ஆசைப்பட்டு 'ஓம்' என்று ஒப்பித் தலைக்காட்டும் ஓங்காரம் என்னும் வேதங்களின் முதலெழுத்தால் ஆபிமுக்யத்தைக் கொடுக்கிறான்."



கவிகள் இருவரும் ஸம்பூர்ணபாதுகாநுக்ரஹம் பெற்ற மஹாகவிகளே. அவர்கள் ஸஹோதரர்களே; பாதுகையின் குழந்தைகளே. இங்கே பதஸ்துதியை (பதஸ்தோத்ரத்தை) வ்யாக்யாநம் பண்ணுகிற சில மஹாரத்நங்களின் சப்தங்கள் (உன்) பாதுகையினுடைய மஹிமையை விஸ்தாரம் செய்கின்றன. 'பதஸ்துதிவ்யாப்ருதிபி꞉ த்வதநுபாவவிஸ்தாரிபி꞉' என்று 3-ம் பாதத்தில் கூறப்படுகிறது. பாதுகாமஹாரத்நங்களின் மதுரமான சப்தங்கள் (சில) அந்த பதஸ்தோத்ரத்தையும் (சில) பாதுகாமஹிமை விஸ்தாரத்தையும் அமைக்கின்றன என்றும் சொல்லப்படுகிறது. அந்த சப்தங்கள் யாருடைய சப்தங்கள்? (உன்) பாதுகையின் கர்ப்பரத்னங்களினுடைய மதுரசப்தங்கள். 'தவ மஹாரத்நாநாம் கர்ப்பஸம்ஜநிதை꞉' — உன்னுடைய கர்பத்தில் தோன்றிய மஹாகவிகள் உன்னுடைய அநுக்ரஹத்தாலே உன் மஹத்திலேயே கவிதாசக்த்யநுக்ரஹம் பெற்றவர்கள். 'தாயே' என்று கூப்பிட்டு உன் கர்பத்திலுள்ளவர் (தோன்றியவர்) என்றதால் இந்தக் கவிகள் உன் வயிற்றில் பிறந்த ஸஹோதரர்கள், ஸகர்ப்பர்கள். ஒரு தாய் பெற்று வளர்த்தவர்கள். அவர்களுக்குள் என்ன விரோதம்? என்ன ஸ்பர்த்தை. அவர்களுக்கு நீயே கவிதாமுகம். அவர்கள் பிறவிக்கவிகள். உன் கர்ப்பத்தில் உன்னால் கவிகளாக அநுக்ரஹிக்கப்பட்டவர்கள். பதஸ்தோத்ரத்தையும் பாதுகாமஹிமவர்ணநத்தையும் செய்யும் உன் கர்ப்பரத்னங்களின் இனிய சப்தங்களால் (ஏற்படும்) ஸயூத்யகலஹம்போன்ற க்ரியை ப்ரஸக்தமாக நன்றாக ஸம்பவமாகிறது. "உன் கர்ப்பரத்நங்களுடைய அழகிய சப்தங்களால் ஏற்படும் ஸயூத்யகலஹக்ரியை போன்றது. ஓர் பாதுகையின் கர்ப்பரத்னங்களானதால் அவற்றிற்கு ஸயூத்யம் சொல்லலாம். பதத்திற்கும் பாதுகைக்கும் ஒரு பெருமாள் ஸம்பந்தத்தால் ஸயூத்யத்வம் சொல்லலாம். பெருமாளுடைய பதஸ்தோத்ரவ்யாக்யாநம் செய்பவரும், பெருமாளின் பாதுகாமஹிமவர்ணநம் செய்பவரும் ஒரே ராஜகுலத்தில் ஸ்துதிபா[illegible]களுக்கு ஸயூத்யம்



189893

சொல்லலாம். இப்படி இவற்றிற்குள் (இவர்களுக்குள்) கலஹம்போல் ஏற்பட்டது ஸம்ஹோதிக்யமாக ஸ்வாமிக்கு லாபத்திலேயே முடிகிறது. என்ன லாபம்? நூற்றுக் கணக்கான ச்ருதிகள் (இரட்டைப்படையாய்) ஏற்படுகின்றன. அநேக நூறுகளான ச்ருதிதத்வங்களான பதஸ்தோத்ரசுலோகங்களும், பாதுகாஸ்தோத்ரங்களும் ஸம்பன்னங்களாகின்றன. கலஹம்செய்துகொள்ளும் இரண்டுவிதமான சப்தங்களும் ச்ருதிகள் ஆகலாமோ? ச்ருதிகளுக்குள் கலஹம் கூடுமோ? வாஸ்தவத்தில் ச்ருதிகளுக்குள் கலஹமில்லை. மேலுக்குப் பார்த்தால் நல்ல ஜ்ஞானமில்லாதவர்களுக்குக் கலஹம்போல் தோன்றும். நிர்குணத்வத்தைச் சொல்லும் ச்ருதிகள் உண்மையில் நிர்தோஷத்வத்தை ஸ்தாபித்து கல்யாணகுணவிசிஷ்டத்வத்துக்கு வராவகாசமேயில்லை. ஸகுணச்ருதிகள் கல்யாணகுணமுடைமையைச் சொல்லுவதால் தோஷமின்மையைச் சொல்லும் நிர்குணச்ருதிகளுக்கு விருத்தமே. ஸிம்ஹாஸனத்தில் யோகிகள் ஸந்நிதியில் ஸஹஜசத்ருக்களான ம்ருகங்களும் விரோதத்தைவிட்டு பரஸ்பரம் மித்ரபாவத்தையே வஹிக்கின்றன. யோகீச்வரரும் ஸித்தஸார்வபௌமருமான பெருமாள் விஷயத்தில் அவர் ஸந்நிதியில் அவருடைய ச்ருதிகள் பரஸ்பரசத்ருபாவத்தை வஹிக்குமோ? ஒன்றை மற்றொன்று ஸுபோபஸுந்தந்யாயத்தால் ஹிம்ஸிக்குமோ? ஹேஷிக்குமோ?" என்று ஸகுணநிர்குணவாதமங்களசுலோகத்தில் சததூஷணியில் ஸாதிக்கிறார். இந்த கவிகளுக்குள் கலஹம்போல் வந்தது பல நூற்றுக்கணக்கான சுலோகங்களுள்ள பதஸ்தோத்ரமும் பாதுகாஸ்தோத்ரமுமாய் ஸம்பந்நமாயிற்று. ஸம்ஹோதிக்யமாகவே முடிகிறது. இரண்டும் பத, பாதுகைகள் கொடுத்த கர்ப்பகவிசக்தியால் உண்டாவதால் இரண்டு வாக்குகளும் ச்ருதிகளாயிற்று. இவர்களுக்குள் உண்மையான கலஹம் இல்லை. ஸ்பர்த்தையில்லை. இது அவர்களுக்குள் ஒரு விளையாட்டே என்பதை 'வெதாம்' என்பதால் அழகாகக் காட்டுகிறார். 'வேடிக்கையாக பரஸ்பரகவிதாசக்திகளை அநுபவிப்



போம். இருவரும் பதத்தின் பெருமையை ஒருவரும் பாதுகையின் பெருமையை ஒருவருமாகப்பாடுவோம்' என்று ஓர் விநோதாநுபவமேயாம். இப்படி ஒரு ஸ்பர்த்தைபோலவும் கலஹம்போலவும் நினைக்கும்படியான ஒரு ஸம்வியாநம் இவர்களுக்குள் வருவானேன்? 'நியதிவசேந' என்று பதில் கூறுகிறார். ஏதோ விதிவசத்தால் (நியதிவசத்தால்) இப்படி ஓர் ஸ்பர்த்தைபோன்றதும் கலஹம்போன்றதுமான ஓர் விளையாட்டமைந்தது. 'நியதிவசேந வெதாம்', 'நியதிவசேந கலஹாயிதம்'. நீங்கள் எப்படி கர்ப்பகவிகளானீர்கள்? 'நியதிவசேந' 'பாக்யவசத்தால்'. 'நியதிவசேந நஹுஷாதம்' 'நியதிவசேந ச்ருதிசதம் ஸமாவதீர்ணே'. 'நியதி' என்பது 'ஸுவநியதி'யையும் சொல்லும். நியோஜநவசத்தால் தாத்பர்யவசத்தால் நூற்றுக் கணக்கான சுருதிகள் ஆகின்றன. பதத்தின் பெருமையை விதித்து(அழுத்தி)ப் பேசினால் பாதுகையின் பெருமையை ஸங்கோசப்படுத்தினதாகுமோ? பதமஹிமையின் விதியாகுமோ? ஆகும். எப்படி? 'நியதிவசேந' 'நியதி ஸமாந்யாய' என்பதைப்போல. ஸுவநியதி ஒன்றானதாலே. தாத்பர்யவசத்தால். ஒரே பர்யவஸாநவசத்தால். பதத்தின் மஹிமையை எவ்வளவு விதித்தாலும், எத்தனை அழுத்திப் பேசினாலும் பதத்தை ரக்ஷிக்கும் பாதுகையின் மஹிமையை ஸங்கோசப்படுத்தினதாகாதோ? பாதுகையின் மஹிமையை எத்தனை த்ருடமாக ஸங்கோசப்படுத்தினாலும் அதற்கு ஸ்வாமியான திருவடியின் ஸ்துதியை விதித்ததாகாதோ? 'பதஸம்வியாயிபிஃ நியதிவசேந ஸுபதநஸாவஸங்கோசிபிஃ'— திருவடியை ஸ்தோத்ரம் பண்ணுவதில் நோக்குக்கொண்டு சப்தித்தாலும் ஸுபர்யவசத்தால் (பர்யவஸாநவசத்தால் முடிவில்) உன் மஹிமையை தீர்மானிப்பதாயும்— "ஸுபதநஸாவ ஸங்கோசிபிஃ நியதிவசேநபதஸந்நிதியாயிபிஃ" உன் மஹிமையையே ஸித்தாந்தமாக சப்தித்தாலும் அர்த்தவசத்தால் (பர்யவஸாநத்தால்) திருவடிஸ்தோத்ரத்தையே விதிப்பதாயும். 'நியதிவசேந' என்பதை நடுவில் கொண்டுவராவிட்டாலும் இந்தப் பொருள் கிடைக்கிறது. 'கில' என்பதற்கு இரண்டு

பொருள்கொள்ளலாம். "இதம் கிலாவ்யாஜமநோஹரம் வபு:" என்னுமிடத்தில்போல, 'கில' என்பது "ஏ" என்பதையும் சொல்லும். 'ப்ரஸஹ்ய ஸிம்ஹ: கில தாம் சகர்ஷ' என்றவிடத்தில்போல விளையாட்டாக பொய்யாக என்றும் சொல்லும். 'கலஹாயிதம் கில' வாஸ்தவத்தில் கலஹக்ரியையில்லை. மேலுக்கு மட்டும் அப்படித்தோன்றும். உண்மையில் கலஹமன்று. 'கதிவசேந' என்பதற்கு ப்ரக்ருதத்தில் ந்யாஸங்களால(வைப்புகளால்) என்பது பொருள். திருவடிகளின் கதிகளால் (அசைவுகளால்) (விந்யாஸங்களால்) திருவடியும் பாதுகையும் சேர்ந்தால்தான் இந்த ஒலி உண்டாகும். பாதுகே மட்டும் தானுக அசங்காது. ஒலிக்காது. திருவடி அசங்கும், ஸஞ்சரிக்கும். ஆனுல் ஒலிக்காது. இரண்டும் சேர்ந்துதான் இந்த இரண்டுவிதமான ஒலிகளும் ஏற்படுகின்றன. இரண்டும்சேர்ந்துதான் கவிகளுக்கு கவிதையை அநுக்கிரஹிக்கும். இரண்டும் சேர்ந்து செய்யும் பாதந்யாஸங்களால் ஒலிக்கும் ஒலிகளுக்குள் உண்மையான கலஹத்திற்கிடமேது? கலஹம் போல் ஒலித்துக்கொண்டு ஒன்றுக்கு இரட்டையாய் இரண்டினுடைய ப்ரஶம்ஸையில் பர்யவஸிக்கும் இரண்டு பெரிய ஸ்தோத்ரங்களமையும்படி செய்கின்றன. உன் திருவடியில் உள்ள இரத்தினங்கள் திருவடியின் ஸஞ்சலனங்கள்ால் ஒலிக்கின்றன.

'கதிவசேந' என்கிறபதத்தில் ச்லேஷையுண்டு. 'ரமாரமண பாதுகே' பிராட்டி ரமிக்கவேணும் இந்த ஒலிகளால். அவளுடைய ப்ரீதிக்காக நர்த்தனம். தோகையை விரித்துக்கொண்டு பெண்மயில்முன் ஆண்மயிலாடுதலிற்போல் இந்த சப்தங்களால் பிராட்டிக்குப் பிரீதி உண்டாகும். பெருமாளையும் அவர் திருவடியையும் கொண்டாடும் ஸம்ஸ்க்ருதத்ராவிடவேதங்கள் அந்த வேதங்களுக்குள்ளும் பௌர்வாபர்ய ஸ்பர்த்தாதிகள் ஏற்படுவதையும் இங்கேநினைக்கலாம். அது ஒருஸாபத்ந்ய கலஹம். தத்வத்தில் அதுவும் கலஹமாகாது. பதங்களிலிருந்து வேதங்களும் பாதுகையிலிருந்து ப்ரபந்தங்களும் வருவதாக அடிக்கடிமுன்பே



பணித்திருப்பதைக் காட்டினேம். 'ரமாரமண' என்பதால் 'ஸுவர்ணா விஷ்ணுப்ரியம்வாணீ' என்றபடி சப்தார்த்தாத்மகமாய், உத்தமகாவ்யஸ்வரூபிகளாய் இருப்பவருக்கு நல்லகாவ்யங்களின் நிர்மாணம் நிரம்பவும் ஸௌம்யமாக இருக்குமென்று ஸூசிக்கப்படுகிறது. 'டிம்பா:' மஞ்ஜுகவிகள் பாதுகைகளின் சிசுக்கள். டிம்ப என்பது குழந்தைகளின் இனிய மழலைச் சொல்லைக் காட்டுகிறது. "பதநகஶிவகம் ஶிஶோ: ஸ்வராதி- ஸ்வரவிஸர்ஜ ஸமஞ்ஜஸம் து" என்று ஜநகர் ஸீதையின் சைசவச்சொற்களை நினைத்தார். காவ்யசப்தங்கள் பத, பாதுகைகளால் உத்க்ருஷ்டமாக நிர்மாணம் செய்யப்பட்டு சிசுக்களாகிய எங்கள் வாயிலிருந்து மழலையாய் வருகிறது. ஏதோ அவ்யக்தமாய் ஒலிக்கிறோம். 'கிமபி ஶிஞ்ஜிதை:' எங்களுக்குக் கிடைத்த அரும்பெரும் செஞ்சொற்கவிகளை ஏதோ சப்திக்கிறோம். 'கிமபி டிம்ப' வர்ணிக்கக்கூடாதபடி மதுரம். பதஸௌந்தர்யாதிகளாயிருந்தாலும், கிமபி (ஏதோ) பாதுகையின் பெருமையையும் நிர்ணயிக்கின்றன. பாதுகையின் அருமையை நிலைநிறுத்தினாலும், கிமபி (ஏதோ) பதஸ்தோத்ரத்தையும் வியாக்யாநம் செய்கின்றன. (கலஹாயிதம் கிமபி) ஏதோ கலஹம்போல், இதற்குத்தான் காரணமென்ன? சொல்லத் தெரியவில்லை. (கிமபி). பெரியோர்கள் கோஷ்டியில், பெருமான் முன்னிலையில் பாதுகே ஶிரஸிலிருக்கையில் வ்யாக்யாநம் செய்துவிட்டார்கள். தட்டக்கூடாமலேற்பட்டு விட்டது. எனக்குக் கலஹபுத்தியில்லை. ஸ்வப்ராபல்யம் இல்லை. பதஸ்தோத்ரம்செய்பவரிடம் மிக்க கௌரவத்துடனும் ஆத்யந்திக ஸௌஹார்த்தத்துடனும் இருக்கிறேன். அவர் உயர்ந்த கவி கர்பகவி. (மஹாத்ம ஶ்ரீமாநு)என்பதுபோல. "பதாம் கில கலஹாயிதம்,வேடிக்கையாய் விளையாடுகிறவர்களுக்குள்ளேதான் இக்கலஹம். வினைச்சண்டையல்ல. உன் குழந்தைகளுக்குள் விளையாட்டுக் கலஹமே அம்மா. 'கிமபி ஶ்ருதிஸமம்' இந்த ஸ்தோத்ரங்கள் வேதங்களா? திருவடியும் (கருடனும்) ஆழ்வாரும் (பாதுகையும்) கவிகளாதலால் ஏதோ வேதம் போன்றதம்மா. 'ஸாபத்ந்ய'ஶப்த

தமும், 'ஸஹஸ்ர'ஶப்தமும் ச்ருதியில் ப்ரயோகிப்பது. மஹாகவிப்ரயோகமுளதால் பாஷையிலும் ப்ரயோகிக்கப்படுகின்றன. 'ஸஹஸ்ர' சப்தம் பாஷையில் ப்ரயோகிக்கலாமோ? இது பாதுகையின் இரத்தினத்தின் ஒலியானதால், வேதச்ருதிபோன்றதுதானே. 'ஸம்வாதே' நன்றாய் ஸம்பவமாகிறது. ஏனென்றால் இந்தக் கலஹம்போன்ற வியாபாரத்தில் ஒன்றுக்கிரண்டாய் ஒரே பெருமாள் மஹிமையைக் காட்டும் வேதஸம்மிதமான ஸ்தோத்ரங்கள் லாபமாகக் கிடைக்கின்றன என்று தாத்பர்யம். இவ்வர்த்தங்களொன்றிலும் ஈஷத்தேனும் க்லேசமில்லை என்பதும் கவிஹ்ருதயத்திற்கு ஸஹிக்ருஷ்டம் என்பதும் ஸஹ்ருதயமநஸ்ஸாக்ஷிகமாகும்.

இப்படி இதில் அதிஸரஸமாகப் பொருள் கிடைப்பதைத் திருவுள்ளம்பற்றி ஸர்வஜ்ஞரும் பாதுகாஸஹஸ்ரகாவ்யத்தில் த்விதீயருமான ஸ்ரீமதாண்டவன் ஸ்வாமி இந்த சுலோகத்தில் இந்த ஸ்தோத்ராவதாரத்தை ஸூசிக்கும் அம்சங்கள் புலப்படுகின்றதை ஸாயித்திருக்கவேணும். பதவிஷயமான ஸ்தோத்ரம் மற்றொரு கவிக்கு விஷயமென்று சில நூற்றாண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட குருபரம்பரை புஸ்தகத்திலும் வைபவப்ரகாசிகைவ்யாக்யாநத்திலும் உள்ளது. கோஷ்டியில் ப்ரதிஜ்ஞை ஏற்பட்டது நிச்சயமாகையாலும், மறுதினம் காலையில் க்ரந்தம் அரங்கேற்றப்பட்டு 'கவிதார்கிகஸிம்ஹ'மென்று ஸதஸ்ஸில் பெரியோர்களெல்லாரும் திருநாமம் சாற்றியதும் நிச்சயமாதலாலும் மற்றோர் உயர்ந்த கவியும் அதே ஸமயத்தில் மற்றொரு ஸ்தோத்ரம் அன்றிரவே செய்வதாக ப்ரதிஜ்ஞை ஏற்பட்டது அத்யந்தம் ஸம்பாவிதமே. இங்கே பதஸ்துதிவிதாநமும், பாதுகாமஹிமை ஸித்தாந்தமும் செய்யப்படுவதாகவும் ஸ்பஷ்டமாகப்பணித்திருப்பதால் குருபரம்பரையிலும், வைபவப்ரகாசிகை வ்யாக்யாநத்திலுமுள்ள பதகமலஸ்தோத்ரவ்ருத்தாந்தம் உண்மையென்று நிச்சயமாகிறது. இங்கே ஸ்ரீரங்கம் ஸ்வாமியின் க்ரந்தத்தில் ஸாதித்திருப்பது பின்வருமாறு— "திருவடியைப்பற்றி ஸ்தோத்ரம் பண்ணுகிறேன் என்று பெரியவர்



ஸாதித்தார். நான் பாதுகையைப்பற்றி ஸ்தோத்ரம் பண்ணுகிறேன் என்றேன். நாங்களிருவரும் ஒரே கக்ஷிக்காரர்கள்தான். பார்த்தால் சண்டைபோல் தோன்றும். இந்த சுலோகத்தால் இன்றைய ராத்ரிக்குள் ஆயிரம் சுலோகம் பண்ணிவிடவேண்டுமென்று ஒருவர் சொல்லுகிற கதையைச் சொன்னதாகத் தோன்றுகிறது" என்று ஸ்தோத்ராவதாரவ்ருத்தாந்தத்தைப் பற்றி இவ்வளவுதான் ஸாதித்துளது. க்ரந்தாரம்பத்திலும் மற்றொரு கவி யாரோ 'ஒருவர்' என்று ஸாதிக்கப்பட்டுளது. திவ்யகாவ்யஸம்வியேயாகும் எம்மண்ணு சுவடி. இத்தனை அழகாக ஸாதித்த பொருளைப் பரிஹஸிப்பவரை வ்யுத்பந்நர் என்றும், ஸஹ்ருதயரென்றும் பண்டிதர் அங்கீகரிக்கமாட்டார். இவர் பரிஹாஸம் இவர் தலைமேலே திரும்பும்.

ஸ்ரீலோகதேசிகனது திருத்தம்பியாரைப்பற்றி ஒன்றும் ஸ்ரீமதாண்டவன் ஸ்வாமி ஸாதிக்கவில்லை. வைபவப்ரகாசிகை, ஆசார்யஸம்பாவனை ஆகிய கிரந்தங்களிரண்டையும் மற்றதைவிட உயர்ந்த ப்ரமாணங்களென்கிறார். ஆசார்யஸம்பாவனையில் இருப்பதைத் தள்ளக்கூடாதென்றும் பேசுகிறார். '700 வருஷங்களுக்கு முன் நடந்த வ்ருத்தாந்தத்தைப் பழைய சுவடிகளுக்கு விரோதமாக நாமாகப் புதியதாய்ச் சேர்க்கவும் கூடாது. இருப்பதைவிடவும்கூடாது' என்றும் பேசுகிறார். 26, 27-வதுபக்கங்களில் மற்றொரு கவி லோகதேசிகன் திருத்தம்பியார் என்பதைத் தள்ளவேண்டுமென்றுகூறிவிட்டு, "அனேகர்களோவென்றால் பின்வருமாறு கூறுகிறார்கள்" என்று தொடங்கி 'மற்றொரு கவி அதிகமாகக் கர்வப்பட்டுக் கொண்டிருந்ததால், பெரியோர்கள் தேசிகனை ஓரிரவில் 1000-சுலோகங்களைச் செய்ய இறங்கச்செய்து, மற்றொரு கவியையும் அப்படிச் செய்யச் சொன்னதாயும், தேசிகன் மட்டும் உடனே (சீக்ரமாக) ஸஹஸைவ ஆயிரம் ஶ்லோகங்களை ஸஜ்ஜப்படுத்தினார். 'ஸம்வாதே' என்கிற சுலோகத்தை ஸாதித்து மற்றொரு கவியையும் புகழ்ந்து ப்ரோத்ஸாஹநம் பண்ணினார்' என்று கூறுகிறார். அநேகர் என்பது யார்? வடகலையார் அல்ல என்பது நிச்

சயம். தென்கலை வித்வான்களில் பலரிப்படி அபிப்ராயப்படுகி றார்களென்று இவர் பேச்சுக்கு அர்த்தம். இப்படி அநேகர் பணிப்பிற்குவிரோதமாக "நிசாயாம் வ்யாஸவிஷயகளான ப்ரா மாணிகவ்யாக்யாதாக்களோ என்றால்" என்று தொடங்கிப் பேசு கிறார். இவர்கள் யார்? எந்தப் பெரியார் இவருக்கு உபதேசித் தார். விபரீதைகாந்தமான புத்தியையுடைத்தான இவர் ஒருவருடைய பேச்சேயொழிய முன்பு எவரேனுமொரு சுவ டியிலும் இவருடைய புது அஸம்பத்தியைப் பேச்சைப் பேசியவ ரல்ல. இவரது ஸஹஸ்ரவசநம் இவர் ஒருவருக்குள்ளேயே விஶ்ராந்தம். ஶ்ரீ அத்தங்கிஸ்வாமியும், வைபவப்ரகாசிகையை தேசிகசரித்ரத்தைப்பற்றி ப்ரமாணமென்று பணித்ததை முன்பே கூறினோம். இவருக்குப் பெரியவர்கள் இவரே.

இவர் என்ன பேசுகிறார்? என்ன யுக்தி? என்ன ப்ரமா ணம்? பார்ப்போம். "ஓரிரவில் ஒரு ஜாமத்திற்குள் இவ் வாயிரமும் ரசநம் செய்யப்பட்டது முதலிய வாதங்கள் கபோல கல்பிதங்கள், கதாப்ரஸங்கங்கள், வெறும் அதிவாதங்கள். ஒரே விஷயத்தைக் குறித்து ஆயிரம் சுலோகங்கள் செய்வது கஷ்ட ஸாத்யமென்று சொன்ன சிலர்முன் 'நான் ப்ரயாஸமன்னி யில் அப்படிச் செய்வேன்' என்று ப்ரதிஜ்ஞையைச் செய்து தேசிகன் ஸ்வயமாக பாதுகாஸஹஸ்ரத்தைச் செய்தார். ஒரு ஜாமத்திற்குள் இந்த க்ரந்தம் செய்யப்பட்டிருந்தால், இந்த விஷயம் அவராலேயே ஸ்பஷ்டமாய் இந்தக் கிரந்தத்திலேயே எழுதப்பட்டிருக்கும். ஸ்தோத்ரபாஷ்யத்தின் முடிவில் "ஸத் துக்களால் ஸதஸ்ஸில் ஸஹஸ்ராஸஹஸ்ரத்தைச் செய்தவராய் கவிதார்க்கிக ஸிம்ஹமென்றும், ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரரென்றும் எவர் எண்ணப்பட்டாரோ அவர்" என்றும் இன்னமென்னத் தையோ உத்ஸாஹத்துடன் ஸாதித்த தேசிகேந்த்ரரும் இந்த விஷயத்தைஸ்பஷ்டமாய் ஸாதிக்கவேண்டியிருக்க இதை மறந்தி ருக்கமாட்டார். உபேக்ஷித்திருக்க மாட்டார். ஆகையால் மற்ற க்ரந்தங்களைப்போல பாதுகாஸஹஸ்ரமும் க்ரமேண நிதானமான வா க்கினாலேயே செய்யப்பட்டது என்று சொல்லுகிறார்கள்.



அடுத்த 'ஸஹஸ:' என்கிற நாமத்தில், இப்படி எல்லாரு டைய ஜ்ஞாநாயதநமோக்ஷகரண ஸ்தலங்களில் அவர்களோடு அபிநந்தநத்தை அபிமானிக்கிறதென்கிற மஹாகுணத்தில் 'ஸந்நிதி' வெகு தூரம் சென்றவர் 'ஸஹ ந:' என்றார். இதற்கு ப்ரமாணங்களாக உதாஹரித்த ஶ்ருதி களென்ன? "ஸதைவ ஸந்தம் ந விஜாநந்தி தேவா:" (ஹ்ரு தயத்தில் கூடவே யிருக்கிறவரை இந்த்ரியங்கள் அறியவில்லை) என்கிற ஶ்ருதி முதலில் உதாஹரிக்கப்பட்டது. இது கூடவே இருக்கும் ஸர்வநியந்தாவைச் சொல்லும். ஸர்வநியந்தாவுக்கு சோகம் இல்லை என்று ஶ்ருதிகளாலும், ஸூத்ரங்களாலும், ஶ்ரீபா ஷ்யத்தாலும், ஶ்ருதப்ரகாசிகையாலும் நிர்ணீதம். இங்கே உதாஹரித்த அடுத்த ஶ்ருதி ஸர்வநியந்த்ருப்ராஹ்மணம். ப்ருஹதாரண்யகத் திலுள்ள ப்ராஹ்மணத்தில் ஒவ்வொரு வாக்யத்திலும் 'அம்ரு தன், அம்ருதன்' என்று துக்காதிகளைப் பன்முறை நிஷேதிக்கி றது. எங்கே து:கித்வத்தைச்சொல்லிவிடுவரோ என்று ஶ்ரு திக்கு அவ்வளவு பயம். 'அநஶ்நந்நந்யோ அபிசாகஶீதி' என்கிற ஸூத் ரம் இதைப் பேசுகிறது. திரும்பவும் திரும்பவும் ஓது வது ஓர் தாத்பர்ய அடையாளம். ஸுபாலோபநிஷத்திலுள்ள ஸர்வநியந்த்ருப்ராஹ்மணத்தில் ஒவ்வொரு வாக்யத்திலும், 'ஏஷ ஸர்வபூதாந்தராத்மாபஹதபாப்மா திவ்யோ தேவ:' என்று ஓதப்பட்டிருக்கிறது. இதற்கு அடுத்தாப்போல் "யஸ்ய ப்ருதிவீ ஶரீரம்... நாராய ண:" என்ற ஸுபாலச்ருதியை ஶ்ரீபட்டர் எடுத்தார். அங்கே யும் இந்த ஸர்வாந்தர்யாமியான ஸர்வநியந்த்ருத்வப் பேச்சு உண்டு. ஆனால் அதனால் ஸர்வநியந்தாவான நாராயணன் ஜகத் தோடு ஒன்றாகிவிடவில்லை. ஜகத்கதமான விகாரம் ஜகத்திற்குத் தான். அடுத்தாப்போல் 'தைவம் சைவாத்ர பஞ்சமம்' என்று நான்கோடு ஐந்தாகப் பகவானும் சேர்ந்து எல்லாக் கார்யங்க ளிலும் கர்த்தாவாகிறதைச் சொல்லும் ஶ்ரீபகவத்கீதையின் சுலோகத்தை எடுத்தார். அங்கேயும் ஜீவன் செய்யும் கர்மங் களெல்லாம் பெருமாளும் சேர்ந்து செய்விப்பதால் பெரு மாள் தலையில் விடியாது. பரார்த்தம் அந்தக் கர்மபலத்தை

எல்லாம் தானுமனுபவிப்பது குணமென்று சொல்லலாமோ? ஜீவனொருவனுக்குத் தான் ஹேயம் என்பது நிச்சயம். பெருமாள் ஸந்நிஹிதரான ஸத்ரூ. அவருக்கு ஜீவனுடைய ஸுக துக்கங்கள் வருகிறதில்லை. இந்த வசநமும் ஜீவதுக்கம் அநுகாதென்கிறதற்குத் தான் பொருந்தும். அடுத்த "ஸஹ:" என்னும் நாமத்திற்கு "இப்படி இரக்ஷிக்கிறான், ஸஹதி என்பது பொருள்" என்பது பாஷ்யம்.

இதனால், முன்பு அபிமானத்தையும், அதடியாக துக்கித்துவப் பிரஸங்கத்தையும் பேசினதும், தன்னுடைய துக்கம்போல அபிமானிப்பதென்றும் பேசினதும் இரக்ஷிப்பதற்கே என்பதைக் காட்டியருளினர். எல்லா ஸ்ரீ ஸூக்திகளுக்கும் பொருந்த இப்படித்தான் பொருள் கொள்ளுவது உசிதம். இந்த ஸ்ரீஸூக்திகளைத் தனிமையில் கவனித்தாலும், இது ஸ்வரஸமான பொருளே. உதாஹரித்த பிரமாணங்களை உத்தேசித்து வேறு பொருள் கொள்ளவே முடியாது. க்ரந்தாந்தரத்தில் தயாவிஷயமாக விஸ்தாரமாய் உபபாதிக்கப் போவதால், இங்கே இதோடு நிறுத்துவோம்.

## நம்மண்ணாவின் குழந்தைப் பேச்சு.

(மழலைப் பேச்சு.)

14-ல் குழந்தைகளுடைய, இலக்கணத்திற்குப் பொருந்தாததும் அவ்யக்தமுமான மழலைச் சொற்கள் போக்யமாவதால், வாத்ஸல்யம் தோஷபோக்யமென்று கக்ஷி பேசுகிறார். பாபம் போக்யமாகுமா வாத்ஸல்ய குணத்தால் என்பது இங்கே இவர் ஸாதிக்கவேண்டிய விஷயம். பேசவே தெரியாத சிறு குழந்தை தெரியாமல் பேசும் இலக்கணவிரோதமான சொற்கள் பாபமா, அப்பேச்சு புத்திபூர்வக பாபமா? அது பாபமுமன்று. புத்தி பூர்வக பாபமுமன்று. புத்திபூர்வ பாபமுமன்று. குழந்தையின் மழலைச் சொற்களைக் கேட்டு ரஸிப்பது போல எனக்கு சிசுபோன்ற உம்மை (ஆளவந்தாரை)ப் பேசக்கேட்டு நான் மகிழவேண்டும் என்று பெருமான் தம்முடைய வாத்ஸல்யத்தால் அபேக்ஷித்ததாகக்



கொண்டு "ச்லாகியாகிய உமக்கு இந்த வாத்ஸல்யம் ச்லாக்யமன்று, நீர் எல்லாருக்கும் ஸ்வாமியான ஸர்வேச்வரர் அன்றோ; ஆச்ரிதர்களிடம் உமக்கு இப்படி வாத்ஸல்யமிருப்பது விருத்தமன்று" என்ற ஆளவந்தார் திருவுள்ளத்தை ஸ்ரீ தேசிகன் விளக்கிய பாஷ்யத்தை உதாஹரிக்கிறார். ப்ரக்ருதத்திற்கு என்ன உபயோகம்? "அவைதுஷ்யராசிகளை நோக்கி வெறுப்புக்கொள்வதில்லை" என்கிறார். அண்ணா படித்தவர்கள் பேசும் புற்சொற்களைப் பரிஹஸிக்கலாம். அச்சொற்களும் பாபமாகாது. "அநந்தனுடைய யசஸ்ஸின் முத்ரைகளைத் தரிக்கும் வாக்விஸரம் பிரதிசலோகமும் அவைதுஷ்யமாயினும் உலகத்தின் பாபத்தைப் போக்கும்" என்னும் சுகவசனத்தை இவர் மறந்தார். சொற்குற்றம் பாபமாகாது. "இங்ஙனம் பல்லாயிரம் நிதர்சனங்கள் நிரூபிக்கலாகும்" என்கிறார். எதற்கு உபயுக்தம். கிளிகள் குளறல் பேச்சு இன்பமாயிருக்கும். அதனாலென்ன? சுகத்தின் விஜல்பனம் பாபமோ? தோஷமோ? இவர் 16-ல் உபயோகமற்ற கதைப் பேச்சுப் பேசுகிறார். குணங்களை வர்ணித்தால் யாருக்கென்ன ஆக்ஷேபம். நிர்தோஷனுக்கு தோஷங்களை ஆரோபிப்பது ஹேயமே. உத்தமப்ரபுவிற்கு புத்தி பூர்வகமான அபராதங்கள் ஒருநாளும் போக்யமாகாது. ஹேய குணங்களிருப்பதாக உபாஸிக்கக் கூடாது என்பதை தத்க்ரது நியாயம் முக்கியமாய் வற்புறுத்துகிறது. பெருமாளுக்கு ஆச்ரிதர் அபராதங்கள் இன்பமாயிருப்பதாக நினைப்பதும், பேசுவதும் எம்பெருமானார் தரிசனத்தையே உபஹாஸ்யமாக்கும். செய்யும் அகாரியங்களையெல்லாம் மெச்சும் க்ஷாந்தனும் பாலிசனுமான ஒரு பிரபு த்ருஷ்டாந்தந்தான் எம்மண்ணா "வாய்ப் பறையாகவும் நாக்கடிப்பாகவும்" சாற்றுவது. இந்த நிதர்சனத்தால் பெருமாளுக்கு மிகவும் யசஸ்ஸை உண்டாக்குகிறார். மனுஸ்ம்ருதியிலிருந்தும் ராமாயணத்திலிருந்தும், ரகுவம்சத்திலிருந்தும், கிராதார்ஜுனீயத்திலிருந்தும் நல்ல பிரபுவின் ஸ்வபாவத்தை விமர்சத்தில் நிரூபித்தோம். வ்ருத்தம் (நன்னடத்தை) இல்லாதவனுடைய வித்யையை

யதுமஹாராஜா மதிப்பதில்லை. கந்யாமாதத்து சுக்லய(ஜு) சதுர்த்தீசந்த்ரனை சுத்தமென்று க்ரஹிப்பரோ' என்பது யா... வாப்யுதயம்.

## எம்மண்ணாவின் ஹாஸ்யப்பணிப்புகளின் அழகு.

22-ல் "பாபப்ரவ்ருத்தி கூடாதென்று இவர் எழுதியுள்ள பரம்பெல்லாம் "காருண்யாஶ்ரிதம் க்ருதம் ப்ரவஶீர்ஷேண ஸஹி-தமத்தனை" என்று எழுதியிருக்கிறார். இவர் சித்தத்தை ஸூசிக்க நாம் எழுதியிருக்கிறதெல்லாம், குருடன் கண்ணுக்கெதிரில் கண்ணாடி பிடிப்பதும், ஒரு ஜந்துவின் வாலை வளைப்பது போலவுமாகும்" என்று பொருள் படும்படி இவர் பேசுவது இவரையே பரிஹஸிக்கிறதென்று இவர் அறியவில்லையே! இங்கே இவர் நாம் பாபம் கூடாதென்றும், அது உபேக்ஷணீயமென்றும் உபபாதிப்பதும் இவருக்கும் இஷ்டமே என்று பேசுகிறார். முன் சுவடியில் இதற்கு நேர் விபரீதம். எம்பெருமானார் தர்சனத்திற்கு இப்படி கேடுமரைப்பரோ என்பது எம் விமர்சத்திற்கு ஓர் உத்திகாரணம். கார்த்தவீர்யார்ஜுனன் கதையைப் பற்றி ஈட்டு ஸ்ரீஸூக்தியை உதாஹரித்து அது விஷயமான ரகுவம்ச ஶ்லோகத்தில், "அகாரியத்தை பிரஜைகள் நினைக்கும் க்ஷணத்திலேயே அந்த ராஜா வில்லும் கையுமாய் எதிரே வந்து பாபம் செய்யாமல் தடுப்பார். அப்படி அவர் யோகமஹிமை பெற்றிருந்தார்." என்றிருப்பதை அங்கே உதாஹரித்து, இதை நம்புவார்கள், ஸர்வேச்வரன் ஸர்வத்திலும் அந்தர்யாமியாக வ்யாபித்து நியமிப்பனென்பதை விசுவசியார்" என்று அங்கேயுள்ளது. இந்த த்ருஷ்டாந்தத்தால் அகார்யத்தைக் குழந்தைகளான ப்ரஜைகள் நினைத்த க்ஷணமே நல்ல பிரபுக்கள் அகார்யமான தோஷத்தை முன்பே தடுப்பார்களென்றே ஏற்படுகிறது. அகார்யவிஷயமாகிற பிரவிருத்தியும், க்ருதியும் ராஜாவுக்கு நிவர்த்தநீயமும், தண்டனீயமுமாயிற்று. மஹாபாரதத்தில் துஷ்யந்தன் சகுந்தலையை நானறியேனென்று மறுக்கையில் நானொருவனாகத்தானே இருந்தேன், வேறு ஸாக்ஷி எது



யார் அறிவார் என்று நீ நினைக்கிறாய். ஹ்ருதயத்திற்குள் எழுந்தருளியிருக்கும் புராணமுனியை நீ மறந்தாய். அவன் பாபகர்மத்தையெல்லாம் பார்க்கிறான். அவன் ஸந்நிதியிலேயே நீ பாபத்தைச் செய்கிறாயே" என்று கேட்டாள். ஈச்வரன் தன்னுடைய ஆஜ்ஞையாகிற சாஸ்த்ரத்தால் பாபத்தைச் செய்யவேண்டாமென்று தடுத்தாலும் அதைக் கேட்பதில்லையென்று ஸபதீதையில் பெருமாள் ஸாதிக்கிறார். "ப்ரக்ருதிம் யாந்தி பூதாநி நிக்ரஹ: கிம் கரிஷ்யதி" பெருமாள் பாபத்தின் நிக்ரஹத்தைத் (தடுத்தலை) தேடுகிறார். எம்மண்ணா அதற்குப் பெருமாளுடைய வெகுமானத்தையும், ப்ரஸாத நிக்ரஹத்தையும் இங்கே ஶேஷ ஶேஷ பேசுகிறார். முன் சுவடியில் முழுதும் பேசினார். தம்முடைய ஸ்வஷ்டமான இசைவிற்கு நேர் விரோதமாக இந்த பாபதான ப்ரவ்ருத்தி எப்பொழுது தொலையுமோ? இவருடைய பழைய பாப ஸாதநப்ரவ்ருத்தி எம்பெருமானார் தர்சனத்தையன்றோ அபஹாஸமாக்குகிறது. 4-ல் எம்மை இவர் நண்பர்கள் (நிழல்கள்) ப்ரஹ்லாதராக்குகிறார் என்கிறார்.' "இருள் தருமா ஞாலத்துள்". என்றவிடத்து "ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானையுமிறே எதிரிடப்பண்ணிற்று" என்ற ஈட்டையநுஸரித்து மஹாசார்யருக்கு இதுவும் ஸம்பாவிதமென்று நினைக்கவாகாதோ என்று சில நண்பர்கள் ப்ரஸ்தாபித்தனர்." என்கிறார்.

இவருடைய நிழல்களும் கூடவிருந்து இவர் க்ரந்த நிர்மாணம். ஸ்ரீதேசிகனையும், எம்மெல்லோரையும் பற்றி உச்சாவசமாக இவர் எழுதியிருந்த திட்டுச்சுவடிக்கு நாம் பதில் எழுதுகிறது ஸாஹஸமாக இவர் பேசுகிறார். இவரது நண்பர்கள் (பரமாநந்த சிஷ்யரான நிழல்கள்) இவரைப் பெருமாளாக்கி விட்டு, எம்மை ஹிரண்யகசிபுவாக்காமல், 'உபஶாந்தவிஶேஷாணாம் ஸாயுத நாம் ப்ரஸ்வதாம் ஹவ' என்று பராசரராலும், ஈடு ப்ரவேசத்தாலும் புகழப்பட்ட ப்ரஹ்லாதனாக்கினாரே! எம்முடைய க்ரந்தத்திலொரு த்ராக்ஷ்யோக்தியேனும் வர்ஷஸஹஸ்ரம் தேடினாலும் அகப்படாது. ஶாஸ்த்ரலேசமும்

காட்டமுடியாது. எம் க்ரந்தத்தை ஸகலவைதிகலௌகிகப் பெரியோர்களும்கடாக்ஷித்து ரஸித்து ஆநந்தபாரவஶ்யத்தை அடைவதை நாமறிவோம். ஸஹ்ருதயனாயிருந்தால் விஷயமாவதற்கு ஐயமில்லை. இவருக்கு ரஸநாடியிருந்தால் இவர் சித்தத்தை எம்முடைய க்ரந்தம் ஆராதிக்கத் தவறாது. ஆராதித்திருக்கிறதென்றும் நம்புகிறோம். அதை இவரது நெஞ்சுமறியும். 'என்னடியார்' பாசுரத்திற்கு நாம் காட்டிய ஸ்வாரஸ்யங்களை முழுவாயால் (முக்தகண்டேந) ரஸிக்கிறதாகப் பேசுகிறார். இந்த க்ரந்தத்தில் ப்ரக்ருதவிஷயங்களில் ஸ்ரீதேசிகன் திருவுள்ளத்தை முழுவதும் இசைவதாகவும், ஸ்ரீசேட்லூர் ஸ்வாமி தாத்பர்யத்திற்கும் முழுவதும் இசைவதாகவும் ஶ்ருதப்ரகாஶிகை முதலிய ஸ்ரீஸூக்திகளுக்கு நாம் காட்டிய தாத்பர்யங்களை எல்லாம் இசைவதாகவும் பேசுகிறார். இவர் அஸமீசீநமென்றும், அஜ்ஞமென்றும் முன் க்ரந்தத்தில் முக்யமாகவே பேசினதை விட்டு நாம் காட்டிய உபேக்ஷாதாத்பர்யத்திற்கு இசைந்தார். புத்திபூர்வகபாபங்கள் ஸஹ்யமாகாது, அவற்றிற்குப் பிராயச்சித்தம் செய்தே தீரவேணும் என்று ஸ்ரீதேசிகனைப்போலவே ஸ்ரீலோகதேசிகனும் ஸ்ரீவரவரமுநியும் நிரூபித்திருப்பதை நாம் காட்டிய பின்பு, இப்பொழுது புத்திபூர்வகபாபங்கள் ஸஹ்யமாகா என்று இசைவதாகச் சில இடங்களிலாவது பேசுகிறார். ஸ்ரீலோகதேசிகனது ஸ்ரீவசனபூஷணஸூக்திகளுக்கு நாம் காட்டிய தாத்பர்யங்களின் ஸ்வாரஸ்யத்தை ஒருவரும் மறுக்கமுடியாது. எம்மணுவும் மறுக்கவில்லை.

எம் பொருளுரைகள் இவருக்கு ரஸித்துத்தான் எம்மை 19-ல் "இரண்டுமிரண்டும் குலையவேணுமென்றிருக்கில் இரண்டுக்குமிரண்டுமுண்டாய்த் தாம், இரண்டும் குலைந்ததென்றிருக்கில் இத்தலைக்கு இரண்டுமுண்டாய்த்தாம்" என்ற ஸ்ரீஸூக்திக்கு நாம் எவ்விததாத்பர்யம் நிஷ்கர்ஷித்தாலும், அதனைத் தாம் அங்கீகரிக்கத் தடையே கிடையாது. அதற்குப் பின் வாங்குவதில்லை என்று எம்முடைய வியாக்யானஸரணியில் உலகத்தில் வித்வான்களெல்லோரும் மனப்பூர்ணமாய் ரஸிப்ப



தைக்காட்டிலும் இவர் முன்பு எப்பொழுதும் அதிகமாய் ஈடுபட்டு வந்ததை அநுஸரித்து இங்கே இப்படி சபதம் செய்கிறார். "ஆசார்யர்கள் அருளிச்செய்கிற உக்திகளை எப்படிப் பட்டது என்பதில் மாத்திரமே நமக்கு விசாரம். அவர்கள் பேசுகிறபடியே நாமும் பேசுவதுதான் அழகு" என்று கடைசியில் ஸாதிக்கிறார். அலங்கார (அணி) வர்ணநங்களைப் பற்றி ஒருவரும் ஆக்ஷேபிக்கமாட்டார். தாத்பர்யத்தை ஸரியாகக் கொண்டால் பேச்சிலுள்ள அணிகளைப் பற்றி என்ன ஆக்ஷேபம்? அணிகள் ரஸமே. அதிஶயோக்த்யாத்யலங்காரரூபமான அதிவாதம் எல்லா பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளிலுமுள்ளதே. அதற்கு ப்ரமாணவிருத்தமான தாத்பர்யம் கொண்டால்தானே பாதகம் வரும். ப்ராமாணிகமாக லக்ஷணை முதலிய முறைகளில் தாத்பர்யங்களைக் கொண்டால் அது அழகே; அபாதிதமே. இது ஸர்வஸம்ப்ரதிபந்நமே. படை வீட்டில் ஒருவன் உண்ண நினைத்தால், அவன் அங்கே உண்பதைக் காட்டிலும், விஷத்தைச் சாப்பிடுவது மேல், என்று அவனுக்கு ஸூக்ஷ்மமாகவும், த்ருடமாகவும், தெரிவிக்க 'விஷத்தைச் சாப்பிடு' என்று சொல்லுவதுண்டு. பதங்களின் பொருளுக்கு நேர் விரோதமாகும் தாத்பர்யப்பொருள். ஆனாலிந்த சொற்கள் மிக அழகே. இதைக் கேட்டு ஒருவன் விஷத்தைச் சாப்பிடுவானா? 'பாபங்களும் ஸஹ்யமாகும்' என்கிற பேச்சு பகவானுக்கு மிக்க ஸ்நேஹமுண்டு என்பதை ஓர் அலங்காரப் பேச்சால் காட்டத்தான். பாபம் என்பது ஹாலாஹலவிஷம். அந்த விஷத்தைப் பெருமாளுக்கு ஸஹ்யமாக ஸமர்ப்பிக்கலாம் என்று நாம் முக்யமாகக் கொள்ளக்கூடாது. 'விஷத்தைச் சாப்பிடு' என்பதற்கு 'விஷத்தை உண்டாலும் உண். விஷ்ணுவுக்கு நிவேதநம் செய்யாத அன்னத்தை உண்ணாதே' என்று அத்புதமான விஷ்ணுபக்தியோடு ஸ்ரீப்ரஹ்மாநந்தர் காட்டிய தாத்பர்யத்தை என்னென்று புகழ்வது.

## "இரண்டுமிரண்டும்" என்ற ஸ்ரீவசநபூஷண ஸ்ரீஸூக்தியின் தாத்பர்யம்.

முதலிலுள்ள 'இரண்டும்'என்னும் பதம் பிராட்டியையும், பெருமாளையும் சொல்லுகிறதென்பது ஸம்ப்ரதிபந்நம். இரண்

டாவது 'இரண்டும்' என்னும் பதம் தோஷத்தையும், குணமில்லாமையையும் சொல்லுகிறதென்பதும், இவ்விரண்டும் ரக்ஷிக்கப்படவேண்டிய சேதநநிஷ்டமென்பதும் ஸம்ப்ரதிபந்நம். தோஷம் குலைவது, பாபங்களெல்லாம் தொலைந்து நிர்தோஷனாவதாகும். குணஹாநி (குணஶூந்யதை) குலைவதென்பது குணாபாவம் போய், குணஸத்பாவம் ஏற்படுவது. குணமாவது— ஶ்ரீபாஷ்யகாரர் ஸாதித்தருளிய 'பரமேஶ்வரவரணீயதாஹேது குணவிஶேஷம்' என்று நாம் நினைக்கிறோம். அதாவது— பகவானுக்கு ப்ரீணநமும், அவனுக்கு ப்ரஸாதநஹேதுவுமான பக்திப்ரபத்திரூபமாயுள்ள உபாயங்களொன்றில் அந்வயம். மோக்ஷார்த்தமாக ரக்ஷணீயனென்கிற வரணம் (அங்கீகாரம்) இங்கே ப்ரஸ்துதமாகையாலே ஶ்ரீபாஷ்யகாரர் ஸாதித்த பரமேஶ்வரவரணீயதாஹேது குணத்தை, குணஶப்தத்தால் ஸங்க்ரஹித்ததாகச் சொல்லுவது ஸ்வரஸம். ஜீவாத்மாவிற்கும் பரமாத்மாவிற்கும் வ்யவதாநலேஶம் இல்லாமல் ஜ்ஞாநவிஷயமாக பரஸ்பரநிரதிசயப்ரீதியோடு அநாவ்ருதமான நித்யஸம்ஶ்லேஷம் உசிதம். இருவருக்கும் நிரதிஶயஸுகாவஹம். இது ஸித்திப்பதற்கு நிஶ்ஶேஷமாக அவித்யை நிவ்ருத்திக்கவேணும். 'எல்லையிலன்னலம் புல்கு பற்றற்றே' என்பது உபதேசம். ஸகலபந்தங்களையும் கழிவி 'ஜ்ஞாதா ஜ்ஞாநமயோऽமல:' என்றாகவேண்டும். நிரதிஶயமான ஸாகாங்க்ஷமான ப்ரீதி இவனுக்கு அவனிடம் உண்டாகவேண்டும். அவனுக்கு இவனிடமுள்ள ஸஹஜப்ரீதியையும், ஸஹஜவாத்ஸல்யத்தையும், ஸததஸம்ஶ்லேஷமநோரதத்தையும் இவன் தன் அநாதிப்ராதிகூல்யத்தால் அணையைப்போட்டுத் தடுப்பதிலிருந்து நிவ்ருத்தித்து தன்னுடைய ஆநுகூல்யஸங்கல்பத்தால் அந்த ஸஹஜப்ரீதி இவன் விஷயத்தில் ப்ரவஹிக்க இவன் இடம் கொடுக்கவேணும். தோஷம் நீங்கி சுத்தனானலொழிய பரமாத்மாவின் ஸம்ஶ்லேஷம் கிடைக்க ந்யாயமில்லை. அசேதனமாயிருந்தால் அதற்கு அநுராகமில்லாமல் திண்ணைப்போல அதை அணைந்து போகிக்கலாம்.



(10) "த்ராஹ்யஸ்மாத் த்ராஹ்யஸ்ம". ஸாராஸ்வாதிநீயில் இரண்டு பக்ஷங்களும் கூறப்பட்டிருப்பதை எம்மண்ணா அறியார். 'யதா' என்று துடங்கியுள்ள பல வாக்யங்களுள. எம்மண்ணா எதைப் பார்த்திருக்கிறார். வ்ருத்தவ்யக்தியான அநாமேயர் இரண்டு பக்ஷங்களிலொன்றை ஆதரித்து, குருபரம்பராதிகாரமும் ரஹஸ்யத்ரயஸாரத்திலுபக்ரமம் என்று வைத்துக்கொண்டன்றோ உபக்ரமத்தை தூஷித்தார். அவர் எடுத்துக்கொண்ட பக்ஷத்தை வைத்துக்கொண்டே அவருக்குக் குருட்டுத்தனத்தை ஆவிஷ்கரணம் செய்வதுதான் நிவர்ணகாத்ர்யம். அந்த அநுமேயர் ஏன் இதை உபக்ரமமாகக் காட்டினார் என்று அவரை இவர் தூஷிக்கிறாரா? அல்லது அவர் உக்தியைக்கொண்டே அவரைத் தூஷித்த எம்மைத் தூஷிக்கிறாரா? அவரிடத்தில் எம்மண்ணாவுக்குப் பக்ஷபாதமே மிக்க உளதுபோலும். 'இப் பக்ஷத்தில் த்ராஹ்ய: என்கிற ஶ்லோகம் ஸாரக்ரந்தத்திற்கு விஷயப்ரயோஜநநிர்தேஶகவாக்யமான மங்களாசரணமாம்' என்று ஸாராஸ்வாதிநீ. 'அவிஜ்ஞாதம் விஜாநதாம்' என்ற ப்ரஹ்மத்தின் பெருமை ஸாரக்ரந்தத்திற்கும் உண்டென்று அண்ணா அறியவேணும்.

(11) "அஹஹ குக்ஷிதஃ குக்ஷிதஃ"— இங்கு குக்ஷிதஃ என்பதற்குத் தமிழ் ப்ரதிபதமாக 'ராஜாக்கள்' என்று எண்ணிப் பேசியதை 'குக்ஷித்' என்று ஓர் அரசனுக்குப் பெயராக உரைத்ததாக தோஷவித்தருடைய கர்ஹணம். 'குக்ஷிதஃ' என்பதற்கு ஶப்தஶக்தியால் 'குத்ஸிதம் க்ஷியந்தி' என்று 'குத்ஸிதமாய் வசநம் செய்பவர், குத்ஸிதமாய் வஸிப்பவர்' என்று பொருள் கொள்ளுவதும் இங்கே கவிஹ்ருதயம். 'யதேச்சத்தால் ஆர்யரானவரை ஏன் கவிகள் பழிக்கிறார்கள்' என்கிற சுகசுலோகம் கவிநெஞ்சிலிருப்பதைக் காட்டியுள்ளோம். 'காவ்யமேஶ்ய' நாடகத்தில் பட்டர் 'கௌ பூமியில் அல்லது குத்ஸிதமாக 'வஸதே' என்று குவலர்— ஜீவர்' என்று ஸாதித்தார்.

(12) தயைக்கு ஸசோகத்வப் பேச்சு ஜரத்கவாக்யமாம். பிறர் துஃகத்தைப் போக்க இச்சை, பிறர் துஃகத்தைப்

பார்த்து து:கத்வம், ஆகிய இரண்டும் தயை என்று ஸ்ரீவடகரை ஸ்வாமி பேச்சு. இச்சையும் துக்கமும் இரண்டும் கலந்தது, இரண்டு ஜ்ஞாநங்களும் சேர்ந்து தயை என்று ஜ்ஞாநத்வயத்தை இவர்கள் விவக்ஷித்ததாக நினைத்தோம். பிறர் துக்கம் தொலைந்த பின்னும், அதனால் பெருமாளுக்கு உண்டான துக்கம் பல மடங்கு அதிகமாயிருத்தலோடு யாவத்ஸம்ஸாரபாவம் ஸுது:ஸ்ஸஹம் என்று ஸ்ரீகோவிந்தராஜர் வ்யாக்யாநம். அவர் ரக்ஷணேச்சையின் கலப்பை மறுக்கவில்லை. இவர் வைகாஷிகமான (ரக்ஷணேச்சை கலப்பில்லாத வடிக்கட்டின) கேவலது:கத்வம் தான் தயை என்று பெருமாள்பேரில் க்ருதக்ஞரமாய் நினைப்பதாக நாம் கொள்ளவில்லை. இரண்டு ஜ்ஞாநங்களும் சேர்ந்து தயை என்பது இவர்கள் பூர்வபக்ஷமென்று நினைத்து, நாம் ரக்ஷணேச்சையை ஒப்புக்கொண்டு து:கத்வாம்ஶத்தை மட்டும் மறுதளிப்பதால் தயை ஸஶோகமா? இல்லையா? என்கிற பேச்சு பொருத்தமுள்ளதே. விஷயாநுபவஜ்ஞாநங்கள் து:கவிருத்தமான ஸுகங்கள். விஷயஸுகம் து:கவிருத்தம் என்று ஶாஸ்த்ரஜ்ஞர் பேசுவர். து:கம் கலந்த இச்சையா? அல்லது ரக்ஷணேச்சை மட்டுமா? என்பது விவாதம். இச்சை கலக்காத கேவலது:கமென்று இவர் புதிதாகப் பேசுகிறார். தயைக்கு து:கரூபத்வமுண்டோ என்று நாம் பேசியிருப்பதைக் கவனிக்கட்டும். எம்மை ஜரத்கவமென்றால் நாம் மறுதளிக்கமாட்டோம். எம் வாக்யங்களை ஓர் வ்ருஷபயுவா ஜரத்கவமென்றால் அவர் தூஷணவாக்யம் ஜரத்கவமென்று நிரூபிப்போம்.

எம்மண்ணுவிடம் ச்ருதமான தூஷணங்களைப் பட்டோலை செய்து பிரகாசப்படுத்துவதாகச் சொல்லிக்கொண்டு, ஸ்ரீரங்கம் ஸ்ரீ ஸுதர்சனஜ்யோதிஷாலயத்திலிருந்து ஓர் சுருதப்ரகாசிகை "தடஸ்த பரிசீலனம்" என்ற பெயருடன் வெளியாயிருக்கிறது. "சத்ருலோகத்தைப் பஞ்சைப்போல் இலகுவாக்கட்டும்" என்று உதாஹரித்த ஓர் ஸுதர்சனசதக ச்லோகத்திற்கடுத்தாப்போல் இந்தத் திருநாமத்தைக் காண்கிறோம். "தூயதா ஸததம் தஸ்வவத்ரூமோகம்" என்றவார்த்தைகளுக்கடுத்தாப்போல் இவர்சுவடிக்கு "தடஸ்த" திருநாமம். உள்ளே மண்டி எரியும்



அஸூயாமஹாஜ்வாலையையும், புகைச்சலையும் எங்கே மறைக்கிறது. அவசமாக இவர் ஸமபிவ்யவஹாரப் பேச்சாவலிரே இவரது விஷாக்னியைக் கக்குகிறார். சததூஷணிக் கிரந்தாரம்பத்தில் 'சுகவத் படந்த:' என்று அந்த க்ரந்தத்தைக் கிளிப்பிள்ளைபோல் ஒப்புவிக்கும்படி உபதேசம். இங்கே இவருக்குத் தூஷணங்களைக் கிளிப்பிள்ளைக்குப்போல் பழக்கிக் கொடுத்து "ஹ்ருதி வஹ ரஸஸஹவிஜ்வதாநி" என்ற க்ரமத்தில் இவர் சிக்ஷகருடைய ஹ்ருதயம் ஆவர்ஜிதமாகிறது போலும். அவருக்கு இவர் டிண்டிமம். இவர்சிக்ஷகருடைய ஓர் சுவடியின்மீது எமது சிக்ஷகரில் ஓர் ஸ்வாமி நூறு தூஷணங்களடங்கிய ஓர் சததூஷணி எழுதி அனுப்பியதாகக் கேட்டுளோம். ஆனல் அது ஏகாந்தமாக ஸ்ரீமுகமூலம். இது லோகாந்தம். பேரருளாளன் திருவடிவாரத்தில் இருந்து ஸாக்ஷாத்தாகவும் எம்மண்ணுவின் அருள்களைச் சிறிது காலமாகப் பெற்று வந்தோம். அதற்கு முன்பு பேரருளாளனுடைய அருளைப்போல் ஸத்யமான அருளே எம்மீது அண்ணுத்வாரமாக அலைந்து வந்தது. இப்பொழுது அவரிடமிருந்தே ஆராத வருளமுதம் பொதிந்த கோயில்வழியாக ப்ரஸரிக்கும் அவர் கிருபாப் பிரவாஹங்களால் ப்லாவிதராகிறோம். 'ஸுதர்சனாலயத்தில்' இருக்கும் பாக்கியத்தைப் பெற்றும் அந்தத் தேஜஸ்ஸின் திருநாமத்தை ஸங்கீர்த்தனம்செய்துகொண்டும் நாம் காட்டப் போகிறபடி எண்ணிறைந்த குதர்சனங்களால் இவர்கள் சுவடியும் பூர்ணமாயிருப்பது ஆச்சர்யமே. இவர் சிக்ஷகருடைய அஸூயாஜ்வாலைகள் ஸ்ரீஸுதர்சனரது ஸத்வஜ்யோதிஸ்ஸையும் மழுங்கச் செய்தனவோ? "பொருமா நீள்படை ஆழி சங்கத்தொடு" என்னுமிடத்தில் சத்ருக்கள் விஷயத்திலும் ஸ்ரீஸுதர்சனனுடைய மார்த்தவஜ்யோதிஸ்ஸைக் கேட்டுளோம். 'நிமீல்ய யதி லோசநே ந ஹி திரஸ்க்ரியதே ஸாஸூய:' (அஸூயாளுவாயிருப்பான் கெட்டியாய்க் கண்களைப் பொத்திக் கொள்ளட்டும். அதனால் ஸூர்யன் மறைக்கப்படமாட்டாரே.) எம் க்ரந்தபாஸ்கரத்தை இவர் மறைக்க முடியாது. சக்ரபாணியின் திருக்கையிலுள்ள ஸுதர்சனனுக்கு பாரதயுத்தத்தில் ஸூர்யனை மறைக்கும் சக்தி உண்டென்பது வெளியாயிற்று. அந்தத் திருநாமத்தைக் கீர்த்தனம் செய்ததால் இதுவரையில் உலகத்திற்கு வெளிப்படாத எத்தனையோ த்வர்யர்த்தங்களை ஸ்ரீபட்டபாதர்

கடாக்ஷங்களைக் கொண்டு அறியப்பெற்று மூலத்தின் ஸௌந்தர்யத்திற்குச் சிறியதாயினும் ஒக்கும்படி அந்தக் கடாக்ஷங்களையே கொண்டு மதுரமதுரமான ஸம்ஸ்க்ருதபாஷையில் எழுதினதும் அரும்பெரியோர்களாலும் ஏககண்டமாக பாரவச்யத்துடன் புகழப்பட்டதுமான ஓர் க்ரந்தத்தை, இவரோ இவராசிரியரோ இப்பொழுது மத்ஸரவசத்தால் என்ன தூஷித்தாலும் அதன் மணமறுது. விமர்சிக்க விமர்சிக்க மணமதிகமேயாகும். இது விஷயம் கேவலம் ரஸசர்ச்சையாகவே செய்வோம். சில ஸங்க்ஷிப்த வாக்கியங்களாலேயே மறுமொழி கூறுவாம். வித்வான் என்று தன்னைத்தானே சொல்லிக்கொண்டு தூஷணங்களெழுதுபவருக்கு எம் பதில்களில் ஆக்ஷேப இலக்கம் குறிக்காவிடில் இன்னதற்குப் பதிலென்று தெரிவது சிரமமென்று பேசுவது அநிபுணம். இலக்கத்தைப் பார்த்தோ விஷயமறியவேணும். “குதிரை கட்டுமிடத்தில் மாடு கட்டியிருப்பதைப் பார்த்து ஸ்தானத்தைக்கொண்டு குதிரையென்று கண்ணுள்ளவன் நினைப்பானோ” என்பார் பெரியோர். ஆயினும் இலக்கக்குறிப்பில்லாவிடினும் இவர் வரிசைக்கிரமம் தவறினாலும் இவர் புத்தி கலங்கிப்போமென்று இவர் ஸூசிப்பதால் யதாஸங்கியமே பதிலுரைப்போம்.

1. (பக்கம் 5) ஸ்ரீ ரங்கராஜஸ்தவம் சுலோகம் (7) இங்கே “ஈசேசிதவ்யவைஷம்யம்” என்கிற பாடத்தையே வியாக்யானத்தில் ஸ்பஷ்டமாக அநுவதித்து அதன் ஸ்வாரஸ்யமும் காட்டப்பட்டிருக்கிறது. நாம் அவகாசத்தின் குறைவினால் அவஸரம் கிடைத்த க்ஷணங்களில் ஓர் கிழிந்த தெலுங்குப் புத்தகத்தைப் பார்த்து சுலோகத்தைக் குறித்துக்கொண்டு நியாயஸ்தலங்களில் வியவஹாரங்களின் மத்தியில் கிடைத்த அவகாசகாலங்களில் “விஷ்ணுச்சிந்த்யோந்தராந்தரா” என்கிற க்ரமத்தில் நடுவே நடுவே அங்கேயே எமக்கே படிக்கவரியதான ப்ரஹ்ம லிபியால் நோட்டுப் புத்தகத்தில் எழுதி, எமக்கும் தெரியாத எம் எழுத்தைப் படிப்பதில் நிபுணரான ஓர் சாஸ்திரிகளுக்கு வேறு ஊருக்கு அனுப்பி, அவர் பண்டிதராகையால் அவரது ஊஹப்படி படித்தெழுதியனுப்பிய வியாக்யானத்தை எம்மண்ணாவுக்கு அனுப்பி, அவர் எம்மிடமிருந்த நிர்வியாஜக்ருபையால் முழுவதும் அபரிமிதமான இன்பத்துடன் கடாக்ஷித்து, சில திருத்தங்களை



யும் செய்து வெகு காலத்திற்குப்பிறகு எமக்குத்திரும்பவனுப்ப அது அச்சிடப்பட்டிருக்கிறது. க்ரந்தத்தின் பொருளின் ரஸத்தில் மக்னராயிருப்பவருக்கு எழுத்துப்பிழைகளும், சொற்பிழைகளும் கண்ணிற்குப்படாதென்பது ப்ரஸித்தம். ஸர்வஜ்ஞர்களான மஹருஷிகளுடைய ஆர்ஷங்கள் இப்படித் தான் நேர்ந்தன. எம்மண்ணாவும் எம்மைப்போலவே ரஸமக்னதையால் சொற்பிழைகளைக் கவனிக்காமலிருந்திருக்க வேண்டும். இரஸத்தின் அதிசயம் பாடப்பிழைகளையும் மறக்கச்செய்தது.

இந்த ஒரு சுலோகத்தின் வியாக்யானமே இதையெல்லாம் மூதலிக்கும். மூலத்திலும், வ்யாக்யான ப்ரதீகத்திலும் “பேதேந” என்பது ஸ்கலிதம். எம் புத்தியிலோ “வைஷம்யம்” என்னும் பாடந்தானிருந்ததென்பது நிச்சயம். பெரும்பாலும் பாடபேதங்கள் அபுத்திபூர்வகமாக விழுந்திருப்பதற்கும் இதுவேகாரணம். சொல் ஸ்கலனங்கள், பாட ஸ்கலனங்கள் விஷயத்தில் “ஸ்வயமபி லிகிதம் ஸ்வயம் ந விஜாநாதி” என்று பேசுமிவர் வாய்க்குச் சக்கரை போடவேணும். மற்ற தூஷணங்கள் விஷயத்தில் இவருக்குச் சர்க்கரை கிடைக்காது. எம்மெழுத்தை நாமே அறியோமென்பது அண்ணா உள்பட எல்லோருக்கும் ப்ரஸித்தம். நாம் எழுதும்போது எம்மாலுரைக்கப்பட்ட அபூர்வ த்வன்யர்த்தங்களும் நாம் ஸ்வபுத்தியால் எழுதியதல்ல. மூலஸ்தவகர்த்தாவின் ப்ரஸாதத்தால் அபராராத்ர ப்ராப்தபுத்தி ப்ரஸாதத்தாலும், எழுதும்போது அப்பொழுதப்பொழுதுகிடைத்த அர்த்தங்களை ஆனந்த ஸாகரத்தில் மூழ்கி பரவசமாய் எழுதிய எமக்கு அனேகமாய் கர்த்ருவத்தில் அந்வயமில்லை தான். ஆனால் பின்னால் பிறரைப்போல் அதன் சுவையில் நன்கு இரஸிக்க மட்டும் தெரியும். தூஷிப்பதற்காக இவரெடுத்த எல்லா சுலோகங்களிலும் அக்ஞாதபூர்வமான பல பல த்வன்யர்த்தங்கள் உரைக்கப்பட்டவைகளை இரஸிக லோகம் சுவைக்கும். ஸ்ரீபட்டர்சிஷ்யரான நஞ்ஜீயரை வேதாந்தி என்பர். பட்டர் வேதாந்த ஸூத்ரத்திலுள்ள “வைஷம்ய” பதத்தை அநுவாதம் செய்ததில் ஐயமில்லை. “வைஷம்ய” சூத்திரத்தை அநுவாதம் செய்வதில் திருவுள்ளமில்லையானால் “பேதேன” என்றே ப்ரயோகித்திருக்கலாம். “வைஷம்ய” ஸூத்திரத்தில் வைஷம்ய பதத்தின் பொருள்களை ஸ்ரீ பட்டர் முழுதும் அறிந்தவர். இவர் அடி-

யோடு அறியாதவர். ஜகத்திலுள்ள தாரதம்யமென்னும் வைஷம்யத்தை உபஜீவித்துத்தான் பூர்வபக்ஷியின் ஆக்ஷேபம். விஷமஸ்ருஷ்டி கர்த்ருத்வ ப்ரயுக்தமாக ஸ்ரஷ்டாவிற்கு வைஷம்யாபாதனம். ஸ்ரஷ்டாவிற்கு வைஷம்யம் உபபாதிப்பதற்கு ஹேதுவான ஸ்ருஜ்யவைஷம்யமும் ஸூத்ர பதத்தால் ஸூசிதமான ஓர் பொருளே. "லக்ஷ்ண ஸூசிதார்த்தாநி" என்ற லக்ஷணத்தைக்கொண்டு அவச்யாபேக்ஷிதமான அனேகார்த்தங்களை ஸூசிப்பதே ஸூத்திரத்திற்கு அலங்காரமென்பர் வேதாந்தநிஷ்ணாதர். "வைஷம்ய" பதம் பூர்வபக்ஷபாகத்திலுள்ளது. "ஈச்வரனுடைய விசித்திர ஜகத் 'ஸ்ருஷ்டியில்' தேவாதி வைஷம்யப்ரயுக்த பக்ஷபாதம்' என்பது தீபம். "தேவாதி விஷமஸ்ருஷ்ட்யா பக்ஷபாத:"என்பது ஸாரம். "தேவாதி உத்க்ருஷ்ட மத்யம அபக்ருஷ்ட ஸ்ருஷ்டியால் பக்ஷபாதம் ப்ரஸங்கிக்கும்" என்பது ஸ்ரீபாஷ்யம். ஜகத்கதமான ஏற்றத் தாழ்ச்சியை ஸூத்ரகதமான 'வைஷம்ய' பதத்தால் குறிப்பிடும் எம்பெருமானார், ஸூத்திரத்திலுள்ள வைஷம்ய பதத்திற்கு பூர்வபக்ஷோபபாதகமான ஸ்ருஜ்யகத வைஷம்யத்தையும் ஸூசிப்பதில் தாத்பரியமென்றே ஸ்பஷ்டமாய்க் காட்டுகிறார். எம்பெருமானார் வாக்யங்களில் ஸூத்ரஸ்தபதமான வைஷம்ய பதத்தையே பரிக்ரஹித்த ஸ்வாரஸ்யத்தை ஸ்ரீ பட்டர் அறியாரோ? பதத்தின் ஆவ்ருத்தியால் அவசியாபேக்ஷிதமான அர்த்தங்களை க்ரஹிப்பதே உசிதம். காவியங்களில் பதத்தின் ஆவிருத்தியில்லாமலே, சப்தசக்தித்வனியாலேயே, கவிஹ்ருதயகதமான வேறு பொருள்களையும் கொள்ளும் முறையைக் காட்டியுளர் ஸாஹித்ய நிபுணர். ப்ரஹ்மஸூத்ரம் குறளிலும், குறளான அரும்பெரும் காப்பியமென்பதை நாம் எம்முடைய ஸம்ஸ்க்ருத பாஷாத்மக விமர்சங்களில் விஸ்தாரமாக விளக்கியுள்ளோம். பிறரான வித்வான்களின் மனதையும் அவையெல்லாம் முற்றும் கவர்ந்தன. இப்படிக் குழந்தைகளான இவர்கள் ஸூத்ரங்களையும், பாஷ்யத்தையும் பற்றிப் பேசப்புகுவது அந்த க்ரந்தங்களின் தௌர்பாக்யமேயாம். "ஸாபேக்ஷத்வாத்" என்ற ஸமாதான ஹேதுவையும் ஜகத்கதமான வைஷம்யமும் அவரவர் "கர்மஸாபேக்ஷமாகையால்" என்று கூறப்பட்டுளது .ஸ்ருஜ்யரின் கர்மவைஷம்யம் ஸ்ரஷ்டாவின் வைஷம்யத்திற்கும் பரிஹாரஹேது. ஸ்ருஷ்டிவைஷம்யம், ஸ்ருஜ்ய கர்மவைஷம்யாபேக்ஷம் என்று அழகாகப் பரிஹாரம். அவரவர்கள் செய்வினையே அவரவர்கள் பல வைஷம்யத்திற்கு விசேஷகாரணம். நிரபேக்ஷரான ஸ்ரஷ்டாவை நாம் கொள்ளவில்லை. "ஆத்மைவ ஹ்யாத்மனோ பந்துராத்மைவ ரிபுராத்மந:" "ஸாபேக்ஷத்வாத்" என்பதற்கு, "விஷமஸ்ருஷ்ட்யா தேவாதி ஜீவகர்மஸாபேக்ஷமாகையாலே" என்று பாஷ்யம். "தேவாதி ஜீவர்கள் தேவாதி சரீரங்களை அடைவது அவரவர்கள் கருமத்தை அபேக்ஷித்து" என்று சுருதிஸ்மிருதிகள் விளக்குகின்றன என்று பாஷ்யத்தில் விவரித்துளது. இரண்டு வைஷம்யங்களும் ஸூத்ரபதத்தால் ஸூசிதமான பொருள்கள் தான். பரிஹார ஹேதுவிலும் ஸ்ருஜ்யவைஷம்யம் உள்ளே நிற்கிறது. உத்தரசதக சுலோகத்திலும், ஸூத்திரத்திலுள்ள வைஷம்ய பதத்திற்கு ஜகத்கதமான வைஷம்யத்திலும் தாத்பர்யமென்பதை "விசித்ரம்" என்னும் பதத்தால் ஸூசித்தார். இங்கே "வைஷம்ய" பதத்தாலேயே ஸூசித்தார். பூர்வபக்ஷத்திற்கு உபபாதகமான இந்த முக்யாம்சம் ஸூத்ரபதத்தாலேயே கிடைக்கையால் உத்ஸூத்ரமாக ஏன் அந்த அம்சத்தை உரைக்கவேணும். ஏன் பிச்சை வாங்கவேணும். ஸூபிக்ஷத்திலும் துர்ப்பிக்ஷமா? அதில்லாமல் பூர்வபக்ஷமொட்டுமா ? ஆக்கிவைத்த அன்னத்தை எறிந்துவிட்டு பிச்சைக்குப் போவரோ. அபேக்ஷிதங்களின் அபிதாநம் ஸூத்திரத்திலேயே கிடைக்கையில் அதை நிபுணர் விடுவரோ. இங்கே வியாக்யானத்தில் வெள்ளமிட்டோடும் அபூர்வரஸங்களிவருக்குச் சுவையில்லையே. இவர் போன்ற அரஸிகர்க்கு ரஸங்களை நிவேதநம் செய்யும்படி அரங்கனே தலையிலெழுதாதே எழுதாதே எழுதாதே. "இதரதாப நசதாநி ஸஹஸ்ரசோ ரஸநிவேதநம் அரஸிகேஷு மா லிக, மா லிக, மா லிக"... என்பது போல்:



"ஏத்தேந ஹுநே ரஸநே ஸிதாபி திக்தாயதே". ஆக 'ஸாபேக்ஷத்வாத்' என்பதற்கு எதன் அபேக்ஷை என்கிற ஆகாங்க்ஷையும் "அவரவர்கள் கர்மவைஷம்யத்தினபேக்ஷை என்று ஸூத்ரபதத்தாலேயே கிடைக்கிறதென்பதும் கருத்து. இவர் விஷமக்ராந்தஸ்ருஷ்டி இவர் மனோவைஷம்யஸாபேக்ஷம். ஸூத்ரத்தை "ஸாரவத் விச்வதோ முகம்." என்பார்.

2. (பக்கம் 8- சுலோகம் 8) எம்முடைய வியாக்யானத்தில் பெரும்பாலும் முன் சொல்லப்படாத அபூர்வப் பொருள்களைத்

89893

தான் நாம் பேசுவோமென்பது ப்ரஸித்தம். முந்திய வ்யாக்யாதாக்களால் உரைக்கப்பட்டுள்ள பொருளோடு நாம் காட்டும் கருத்துக்களையும் சேர்த்துக்கொள்ளுவதில் எமக்கு நோக்குளதே. எம் வியாக்யானப் பொருள்களை ஆகம ந்யாயம்போல் மித்ரவத் சேர்த்துக்கொள்ள வேண்டியதேயல்லாது, ஆதேச ந்யாயத்தைக்கொண்டு அவற்றைத் தள்ளுவதில் சிறிதும் நோக்கில்லை என்று எமது முதற் சுவடியிலேயே ஜ்ஞாபித்திருக்கிறோம். சொன்னதையும் தெரிந்ததையும் திரும்பச் சொல்வதில் எமக்கு தாத்பர்யமில்லை. கிருதகரமில்லாமல் விஷயங்கள் புதிதாக இருக்க வேணுமென்று எம் மனோரதம். ''ஸ்ரீஸ்தனத்திற்கு ஆபரணம்'' என்ற முன்னுரைகளிலுள்ள பொருளைக் கொள்வது எமக்கு இஷ்டமே. ஸ்தனகஸ்தூரிமகரீ முத்திரை விழுவதற்கு வேண்டிய பொருத்தத்தை இங்கே கொள்வது உசிதமே. நாம் காட்டிய பொருளையும் கொண்டால் ரஸம் மிகப் பெருகும். "ஸாதாரணோ பூஷண பூஷ்யபாவ:'' என்பர் மஹா கவிகள். இந்தத் தம்பதிகள் அன்யோன்ய சோபாவஹரென்பதும், பரஸ்பரம் நிரூப்ய நிரூபக பாவமுடையவரென்பதும் ப்ரஸித்தம். இங்கே ஆசார்யனைப் பெருமாளைப் பணிப்பதையும் "தேஜஸ்'' சப்தம், மத்யமமான வாக்ரூப தேஜஸ்ஸையுடைய ஆசார்ய தேஜஸ்ஸை வியஞ்ஜிப்பதையும், ''தேஜோமயீ வாக்'' என்ற ச்ருதியை உதாஹரித்துக் காட்டினோம். கீதை பாடிய தேஜஸ். "சைதன்ய ஸ்தன்யதாயியான ஸ்ரீஸ்தனங்களுக்கு இங்கே ஆசார்யத்வரூப தர்மத்தில் தாயின் ஸஹசரணத்திலும் உபயோகமும் காட்டியுளோம். "யஸ்ய ஸா'' என்றபடி இவளை 'அவருடையவளே' என்று "ஸ்தனம்'' பொருந்துவதால் உபபாதிக்கப்படுவதை முத்ரா ராக்ஷஸ ச்லோகத்தை உதாஹரித்துக் காட்டினோம். ரத்னகாஞ்சன தேஜஸ்களின் சேர்க்கை என்பதையும் காட்டினோம். பெருமாள் ஸம்பூர்ணமான விக்ரஹத்திற்கு ஸ்ரீயின் உரோஜத்தை ஆபரணமாகப் பணிப்பது அழகே. பூஷ்யமான உடலுக்கு ஆபரணம் சிறியதாயிருக்கும். காது, மூக்கு முதலிய அவயவங்களில் அதினிலும் பெரிய ஆபரணங்[illegible] க்ராமீணர். "ஊர்வசியின் உடம்பு ஆப[illegible]ங்களுக்கு ஆப[illegible]ாகும்'' என்றார் மஹாகவி.

## புஸ்தக விமர்சம்.

(1) ஸ்ரீ பாஷ்யம் 10 ஸம்ஸ்கிருத வ்யாக்யானங்களுடன் ஸ்ரீ-உபவே அனந்தாசாரிய ஸ்வாமியாலும், கிருஷ்ணமாசார்ய ஸ்வாமியாலும் சோதிக்கப்பட்டு அரும்பத உரைகளுடன் ஸ்ரீ-உபவே A. R. கிருஷ்ணமாசார்ய ஸ்வாமியால் மாதஸஞ்சிகையாகப் போடப்பட்டு இரண்டு ஸஞ்சிகைகள் நமக்கு அனுப்பப்பட்டுள்ளன. முதல் ஸஞ்சிகை முழுவதையும் முன்பே ஸேவித்துக்கொண்டோம். இரண்டாவது ஸஞ்சிகையையும் இப்பொழுது கிடைத்ததும் ஸேவித்தோம். ஶ்ருதப்ரகாஶிகை (1), அதற்கு பாவப்ரகாஶிகை (2), ஸ்ரீஸுதர்ஶந ஸூரியின் ஸங்க்ரஹமான ஶ்ருதப்ரதீபிகை (3), ஶ்ருதப்ரகாஶிகைக்கும் ப்ராசீநமான ந்யாயப்ரகாஶிகை என்னும் ஸ்ரீமேகநாதாரிஸூரிவ்யாக்யாநம் (4), ஸ்ரீ தேஶிகன் தத்த்வடீகை (5), ஸ்ரீபாஷ்யத்திற்கு ஸாக்ஷாத் வ்யாக்யாநமான ஸ்ரீரங்கராமாநுஜஸ்வாமியின் மூலபாவப்ரகாஶிகை (6), ஸ்ரீபாஷ்யத்தை அநுஸரித்து ஸூத்ரத்திற்கு வ்யாக்யாநமான வரதநாராயண பட்டாரகருடைய ந்யாயஸுதர்ஶநம் (7), அதிகரணஸாராவளி (8), அதிகரண சிந்தாமணி (9), விஷயவாக்யதீபிகை (10) ஆக பத்து வ்யாக்யானங்களுடன் அறுபது ஸஞ்சிகைகளில் பூர்த்தி செய்வதாக ஸங்கல்பித்து இரண்டு ஸஞ்சிகைகள் வந்திருக்கின்றன. கணக்கில்லாத பரிச்ரமத்துடன் நன்றாக சோதித்து பண்டிதர்களுக்கும் மிகவும் உபயோகமான வெகு அழகான குறிப்புகளை அனேகவிடங்களில் அடியில் சேர்த்தும், க்ரந்தங்களை அச்சிட்டுவரும் மஹாவித்வான்களை நாம் எவ்வளவு புகழ்ந்தாலும் போதாது. இந்த வ்யாக்யாநஸமூகத்தில் 4, 6, 7 முன்பு எங்கும் அச்சிட்டதேயில்லை. இந்த க்ரந்தங்களின் அச்சு பூர்த்தியாகவேண்டுமென்று எல்லோரும் ப்ரார்த்திக்கவேண்டியதுடன் சந்தாதாரராகச் சேர்ந்து மாதஸஞ்சிகைகளை வாங்கி க்ரந்தம் பூர்ணமாகும்படி செய்வது நமது கடமை. ஸ்ரீபாஷ்யத்தை ப்ரவர்த்திப்பித்தல் முதல் கைங்கர்யம் என்பது ஸ்ரீதேஶிகன் உபதேஶம்.

**Registered No. M. 3343**

நயத்யுமணி என்னும் ஸாரஸாரத்தார் வ்யாக்யாநத்தையும் இத்தோடு சேர்த்துக்கொள்ளலாம். தத்வமார்த்தாண்டம் மூன்று அதிகரணங்கள் நாம் ஸொந்தத்தில் 24-வருஷங்களுக்கு முன் அச்சிட்டிருப்பதையும் இவர்களிடம் கொடுக்கத்தயாரா யிருக்கிறோம்.

(2) பிள்ளையந்தாதி ஸ்ரீஅண்ணங்கராசாரியரால் உரையுடன் அச்சிடப்பட்டு கிருபையோடு எமக்கு அனுப்பப்பட்டது. தமிழில் தம்முடைய பாண்டித்யத்திற்குத் தக்கபடி அழகாக பாடங்களை சோதித்து நல்ல பதவுரையுடனும் தமிழ் இலக்கணப்படிக்கு வக்தவ்யமான அம்சங்களுடனும், சில அம்சங்களுடனும், சில அழகான ஸாவத்யக்ஷேபநங்களுடனும், ஸாக்ஷ்யமான ஸ்ரீதேசிகஸூக்தியோடு இந்த க்ரந்தம் ஸாயிக்கப்பட்டிருப்பதை நாம் மனமார மெச்சுகிறோம். வ்யாக்யானம் மிகச் சுருக்கத்தை அவலம்பித்தது. இந்த க்ரந்தத்தை தேசிகஸக்தர்கள் எல்லோரும் அநுபவிக்க ப்ரார்த்யம். இந்த வ்யாக்யானத்தை ஸேவிக்கையில் எமக்குத் தோன்றிய மூலத்தில் ஸாவிசேஷங்களை பின்பு ஜ்ஞாபிப்போம்.

*A. V. Gopalacharya* **Editor.**

---

Printer:— M. K. Parthasarathi Iyengar,
Sri Komalamba Press, Kumbakonam.
Edited and Published at Srirangam by A. V. Gopalachariar,
for the Sri Desika Srisukthi Samrakshana Sabha, Srirangam.